The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. | மே 1920. | இலக்கம் 5.

APOSTOLIC LETTER.
அப்போஸ்தோலிக்கு நிருபம்.

நமது பரிசுத்த பிதாவாகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் என்னும் பாப்பரசர் உலக முற்றிலும் சத்திய வேதத்தைப் பரப்புவதற்காக சகல பிதாப்பிதாக்கள், பிரதம அத்தியட்சகர்கள், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் முதலியவர்களுக் கெழுதிய அப்போஸ்தோலிக்கு நிருபம்.

சங்கைக்குரிய சகோதாரரே, உங்களுக்கு அப்போஸ்தோலிக்கு ஆசீர்வாத முண்டாவதாக!

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தமது பரம பிதாவிடம் திரும்பிப்போகுமுன், "உலகமெங்கும் போய் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள்" (மார்க். XVI. 15) என் றருளிய இவ்வார்த்தைகளால் தம்முடைய சீஷர்களிடம் ஒப்புவித்த வேதம்போதிக்கும் உன்னத கடமை, அப்போஸ்தலர் மரணத்துடன் முடிவடையாமல், உலக முடியுமட்டும், அதாவது, இரக்ஷண்யமடைய உலகில் மனிதர் உள்ளவரையிலும் அப்போஸ்தலர் ஸ்தானத்தில் அவர்களுக்குப் பின் வருவோர்மூலியமாய் நிலைபெற்று நடந்தேறி வரவேண்டியதென்பது திண்ணம். "அவர்கள் புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கித்ததால், அவர்களுடைய சத்தம் உலக முழுதுஞ் செல்ல, அவர்கள் வார்த்தைகள் பூமியின் பல கோடிகளிலும் பரவின." சர்வேசுரனுடைய பரிசுத்த திருச்சபையானது அத்தேவ கட்டளையை சிரமேற்கொண்டு, சேசுக்கிறீஸ்துநாதரால் மனுக்குலத்துக்குக் கொண்டுவரப்பட்ட நித்திய இரட்சண்ய சுவிசேஷத்தைப் போதிக்கும்பொருட்டு தன் தூதரையும், குருக்களையும் அந்நாள்முதல் இத்தனை நூற்றாண்டுகளாய்த் தொடர்ந்து அனுப்பப் பின்னிடையவில்லை.

அப்படியே கிறீஸ்து வேதந் தொடங்கின முதல் மூன்று நூற்றாண்டுகளில் நரகத்தினின்று உண்டான வேத கலாபனையின் உக்கிரமானது, விருத்தியாகுந் திருச்சபையை இரத்தப்பிரவாகத்தில் மூழ்கடித்தழித்துவிடும்போலிருந்தபோதும், சுவிசேஷம் பகிரங்கமாய்ப் பிரசங்கிக்கப்பட்டு அதன் தொனியானது உரோமை ராச்சியத்தின் கடைசி எல்லைகள்வரையிலும் சப்தித்தது. பின்னர் திருச்சபைக்குச் சமாதானமும் சுயேச்சையும் ஏற்பட்டகாலத்தில், பரிசுத்தத்தனத்திலும் பக்தி வைராக்கியத்திலும் சிறந்து விளங்கினவர்களின் விசேஷ முயற்சியால், உலகமடங்கலிலும் வேதப் பரம்புதல் விஷயமாய்த் திருச்சபை செய்த அபிவிருத்தி மிகப் பெரிதே. பிரகாசியார் என்ற கிரகோரியார் சுவிசேஷத்தின் ஒளியால் அர்மீனிய நாட்டைப் பிரகாசிக்கச்செய்தார். அப்படியே ஸ்டைரியாவை விக்டோரினுரும், எத்தியோப்பி

யாவை புரூமென்சியாரும் விளங்கச்செய்தார்கள். பத்திரீசியார் ஐரீஷ் ஜாதியாரை மனந்திருப்பி சத்திய வேதத்திற் சேர்த்தார். அதுபோல் அகுஸ்தீன் ஆங்கிலேயரையும், கொலம்பாவும் பல்லேடியாசும் ஸ்காட் ஜாதியாரையும் மனந் திருப்பினார்கள். பின்னர் கிலமேண்ட் வில்ல பிரார்டு என்னும் யூட்ரிக்ட் நகரின் முதல் மேற் றிராணியார் உலாந்து நாட்டை வேதத்துக்குட்ப டுத்தினர். போனிபாஸ், அன்ஸ்கார் என்பவர் கள் ஜெர்மன் தேசத்தாரையும், சிரில், மெத் தோடியஸ் என்பவர்கள் ஸ்லாவ் ஜாதியாரையும் சேசுக்கிறீஸ்துவின் திருச்சபைக்குள் கொண்டு வந்தார்கள். அப்போஸ்தலத்துவத்தின் அலு வலே இன்னும் பரவச்செய்ய வில்லியம் தெ ரூப் ரக் என்பவர் மங்கோலிய ஜாதியாருக்குள் சுவி சேஷ ஒளியைக் கொண்டுசென்றார். முத்திப்பே றுபெற்ற பத்தாவது கிரகோரியார் சீனாவுக்குப் போதக குருக்களை அனுப்ப, கொஞ்ச காலத்துக் குப்பிறகு அர்ச். பிரான்சீஸ்கு சபை குருக்கள் அங்கு திருச்சபையை ஸ்தாபித்தார்கள்; அது அங்கு கொஞ்ச காலம் செழித்தோங்கியபின்னர் வேத கலாபனையால் அழிக்கப்பட்டது. புதிய உல கம் என்னும் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட போது அப்போஸ்தலத்வ ஆவல் நிறைந்திருந்த ஒருகூட்டத்தாரான அர்ச். சாமிநாதர் சபையாரும் அவர்களுக்குள் பேர்பெற்று விளங்கியவரான மகா பெரிய பார்த்தலோமெயு லாஸ்கசாஸ் என்பவரும் அத்தேசத்திலிருந்தபோதேசுதேசிகளைக்காப்பதி லும், மனந்திரும்புவதிலும் பிரயாசைப்பட்டுழைத் தார்கள். மெய்யாகவே அப்போஸ்தலருக்குச் சரியொத்த அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் சர் வேசுரனின் மகிமைக்காகவும், ஆத்துமாக்களின் ஈடேற்றத்திற்காகவும் இந்தியாவிலும் ஜப்பானி லும் வெகு உற்சாகத்துடன் உழைத்தபின், தாம் நாடிச்சென்ற சீன தேசத்தின் எல்லைகளில் மரித் தார்; அவர் மரணம், விசுவாசப் பரம்புதலுக்காக பேராவல்கொண்ட பேர்போன பல சன்னி யாச சபையார், போதக சபையார் பிற்காலத் தில் பலவித கஷ்ட இடைஞ்சல்களுக்கிடையில் செய்யப்போகும் அப்போஸ்தலத்துவத்துக்குச் சனுவாகி, விசாலமான அந்நாடுகளைப் புதிதாய் மனந்திருப்புவதற்கு வழியாயிருக்கக் காரண மாயிருந்தது. கடைசியாய்க் கொஞ்ச காலத் துக்குமுன் கண்டுபிடிக்கப்பெற்ற ஆஸ்டிரே லியா நாடும், விடாமுயற்சியுடனும் தைரியத்துட னும் சென்று கண்டுபிடிக்கப்பெற்ற ஆப்பிரிக்கா வின் உட்பாகமும் சத்திய விசுவாசத்தின் குருக் களை வரப்பெற்றன; இப்பொழுதோ பஸிபிக் மகா சமுத்திரத்தில் நமது போதக குருக்களின் ஊக்கம் நிறைந்த உழைப்பின் பலனை அடையாத தீவு தீவாந்திரங்கள் ஒன்றுமே கிடையாது; அக் குருக்களில் அநேகர் தமது சகோதரர்களுக்கு இரட்சண்யத்தை யடைய விரும்பி, அப்போஸ் தலருடைய நன்மாதிரிகையைப் பின்பற்றி, பரி சுத்தத்தனத்தின் உச்சிப் படியை அடைந்த துடன், அவர்களில் சிலர் வேதசாட்சிகளாய்த் தாங்கள் சிந்திய இரத்தத்தால் தங்கள் அப்போஸ் தலத்துவத்தை முத்திரையுமிட்டார்கள்.

வேத விசுவாசப் பரம்புதலுக்காக நமது சகோதரர்கள் எடுத்துக்கொண்ட அளவற்ற அபார கஷ்டப் பிரயாசைகளையும், அவர்கள் அஞ்சா தைரியத்துடன் செய்த முயற்சிகளையும் யோசிக் குங்கால், மரணத்தின் நிழலில் இன்னும் அமர்ந் திருக்கும் எண்ணிறந்த அஞ்ஞானிகளைக்கண்டு நாம் ஆச்சரியப்படுவது சகஜம்; ஏனெனில் கொஞ்ச நாளைக்குமுன் எடுத்த கணக்கின்படி அந்த அஞ்ஞானிகளின் தொகை ஏறக்குறைய ஒரு நூறு கோடியாம்.

இந்தக் கோடிக்கணக்கான ஆத்துமாக்களின் கதியிற் பரிதாபங்கொண்டு, தேவ இரட்சிப்பின் நன்மைகளை அவர்களுக்கும் அளிப்பது நம்மு டைய முக்கிய கடமையாதலால், இஸ்பிரீத்து சாந்துவின் ஏவுதலால் வேதப் பரம்புதல் சபை களை அபிவிர்த்தி செய்வதற்காக கிறீஸ்துவ நாடு களிலெல்லாம் செய்துவரும் பிரயத்தனங்களை மிகச் சந்தோஷத்துடனும் அக்கரையுடனும் நாம் கவனித்துவருகிறோம். ஆதலால் இப்பிரயத்த னத்தை யூக்கி விர்த்திசெய்வது நமக்குப் பிரிய யமான ஒரு கடமையாமே. ஞான ஒளியும் உதவி யும் கிடைக்கும்படி ஆண்டவரை யாவலோடு மன் றாடியபின், சங்கைக்குரிய சகோதரரே, உங்களை யும், உங்கள் குருக்களையும் உங்கள் மந்தைகளை யுந் தூண்டவும், உற்சாகப்படுத்தவும், இந்த முக் கிய விஷயத்தில் நீங்கள் எவ்வாறு உதவி புரிய லாம் என்று உங்களுக்கு நினைப்பூட்டவும் இந் நிருபத்தை உங்களுக்கு வரையலானோம்.

மிஷன் தலைவர்கள்.

மிஷன் தலைவர்களாயுள்ள மேற்றிராணிமார், அப்போஸ்தோலிக்கு விக்கர்கள், அல்லது பிரி பெக்டுகளுக்கே இந்நிருபம் முக்கியமாய் வரையப் பெற்றிருக்கிறது. விசுவாசப் பரம்புதலே அவர்க ளுக்குள்ள முக்கியமான முதற் கடமையாதலின், அதன் அபிவிர்த்திக்கு அவர்களே முக்கியமானவர் களென்று திருச்சபை நம்பியிருக்கிறது. அவர்க ளுடைய அப்போஸ்தோலிக்கு ஊக்கம் எத்தகை யானதென நமக்குத் தெரியும்; விசேஷமாய்க் கடந்த சில வருஷங்களில் தத்தம் இடங்களைவிட் டுப் பிரியாமல் அவர்கள் இருந்ததோடு, சர்வேசுர னுடைய ராச்சியத்தைப் பரவச்செய்ய அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையில் அவர்களுக்குண் டான துன்பதுரிதங்களும் நமக்குத் தெரியும்; அப்போஸ்தலர் ஆதீனத்தின்மட்டில் அவர்கள் கொண்டுள்ள அன்பும் மதிப்பும் நமக்குத் தெரிந்தி

ருப்பதால்தான், தகப்பன் தன் மக்களுக்குரைப்பதுபோல், எமது உணர்ச்சிகளை அவர்களுக்கெடுத்து இயம்புகிறோம். ஆதலால் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் மிஷனின் உயிராயிருக்க வேண்டுமென்பதை ஊன்றி யோசிப்பார்களாக. மேலும் அவர்கள் தங் குருக்களுக்கு முன்மாதிரிகையாயிருந்து, நன்மைகளைச்செய்ய அவர்களை உற்சாகப்படுத்துவார்களாக. ஆண்டவருடைய திராட்சத்தோட்டத்தில் உழைப்பவர்கள் எவராயினுஞ்சரி, அவர்கள் செய்யும் வேலை எதுவாயினுஞ் சரி, அவர்கள் ஒவ்வொருவரும், தங்களைச் சர்வஜாக்கிரதையாய்க் காத்து, புண்ணியத்தில் வளர்த்து, தங்கள் சகல காரியங்களிலும் அக்கரைகொண்டு, தங்களது ஜெயத்தில் சந்தோஷித்தும் கஷ்டங்களில் அநுதாபங்காட்டியும், தாங்கள் நடத்திவரும் நல்ல காரியங்களுக்கு உதவி செய்து, தங்களைச் சார்ந்தவை யனைத்தும் அவரைச் சார்ந்தவையெனக் கருதிவரும் ஒரு பிதாவினால் தாங்கள் ஆளப்படுகிறார்களென்று உணரும்படிச் செய்யவேண்டியது. மிஷன்களின் நிலையும் கதியும் அவற்றினாட்சியைப் பொறுத்தனவாயிருக்கின்றன. அவற்றிற்குச் சம்பவிக்கக்கூடிய பெருங் கெடுதி அவ் வேலைக்கு லாயக்கில்லாதவர்களால், அவை ஆளப்படுவதேயாம். கிறீஸ்துநாதரின் நாமத்தை யெங்கும் பரப்பவேண்டுமென்று, தம் தேசத்தையும் பந்துமித்திரரையும்விட்டு, தம்மை அபாயகரமான நெடுங்காலப் பிரயாணத்துக்குட்படுத்தி, ஆத்துமாக்களென்னும் அறுவடையைக் கிறீஸ்துவினிடங் கொண்டுசேர்க்கப் பெருங் கஷ்டங்களை யநுபவிப்பதில் உவப்புடன் கண்ணுங் கருத்துமாயிருப்பவர்கள் ஜாக்கிரதையுள்ள தலைவரின்கீழ் உழைத்துவர நேர்ந்தால், அத்தலைவரின் முன் ஜாக்கிரதையாலும், புண்ணிய குணங்களாலும் அவர்கள் பயனடைந்து, அவர்கள் உழைப்பும் பலனளிக்கும் என்பதிற் சந்தேகமேயில்லை ; அப்படிக்கில்லையேல், அவர்கள் வரவர தங்கள் வேலைத் தொந்தரையாலும், ஆறுதலின்மையாலும் அலுத்துப்போய், கடைசியில் அதைரியத்துக்கும், அருவருப்புக்கும் இடந்தருவார்கள் என்று வெகுவாய்ப் பயப்படவேண்டியிருக்கிறது.

கிறீஸ்துவர்களல்லாதார்மட்டில் அவர்களுக்குள்ள கடமைகள்.

மேலும் தம் வேலையை விர்த்திசெய்து அதை முடிவுக்குக் கொண்டுவருவதே ஒரு மிஷன் தலைவருடைய முதற் கவலை. ஏனெனில், தம் மிஷன் எல்லைக் குட்பட்ட தேச முழுவதும் தம் பாமரிப்புக்கு விடப்பட்டிருப்பதால், அதில் வசிக்கும் மனிதர்கள் அனைவோரின் இரட்சண்யத்துக்காகவும் அவர் உழைக்கவேண்டும். ஆதலால், தமக்குள்ள பெரும் ஜனத்தொகையில் சில ஆயிரம் பேரை மனந்திருப்பிவிட்டால், அத்துடன் வரையறுத்துத் தம் வேலையை நிறுத்தித் திருப்தியோடிருத்தலாகாது. சேசுக்கிறீஸ்துவானவரில் பிறந்த அனைவரையும் ஆதரித்து வளர்த்துக் காப்பாற்றுவதுடன், அவர்கள் தம்மை விட்டுவிலகி சிதைந்துபோகாதபடிக்கும் பார்த்துக்கொள்வார்களாக. தொகையில் மிகுந்தவராகிய கிறீஸ்துவரல்லாதாரும் கிறீஸ்துவ சத்தியத்தையும், சீவியத்தையும் அறிந்து நடக்கும்படி அவற்றை அவர்களுக்குப் போதிக்க தம் பலமெல்லாங்கொண்டு தளரா முயற்சி செய்யாதவரையில், ஒருவர் தம் கடமையைச் செலுத்திவிட்டதாக நினைக்கவே கூடாது. சுவிசேஷப் போதகம் மிகத் தீவிரமாயும் அனுகூலமாயும் ஒவ்வொருவருடைய காதுக்கும் எட்டும்படி இதர மிஷன் ஸ்தானங்களும், மத்திய ஸ்தானங்களும் ஏற்படுத்துவது பிரயோசனகரமானதென அவர் கண்டுகொள்ள வேண்டியது; அப்புது பங்குகள் நாளாவட்டத்தில் விர்த்தியாக ஆக அவருடைய பழய ஆதீனத்தைத் தக்கச் சமயம்பார்த்து பல விக்காரியேட்டுகளாகவும், பிரிபெக்ட்டுகளாகவும் பிரிக்க வேண்டியது.

மேற்றிராசனங்களைப் பிரித்தல்.

நாம் மேற்காட்டிய வழியை யநுசரித்து, எதிர்காலத்தில் வரவிருந்த சர்வேசுரனுடைய இராச்சியத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டிய அப்போஸ்தோலிக்கு விக்கர்கள் எவராயிருப்பினும், அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நாம் புகழவேண்டியதே. மேலும் இக்காரியத்துக்குப் போதுமான குருக்கள் தமது சபையில் கிடைக்காதபோது, அத்தலைவர் மற்ற சன்னியாச சபைகளின் உதவியைத் தேடி தமக்கு வேண்டியவர்களைப் பெற்றுக்கொள்ள ஒருபோதும் பின்வாங்கவில்லை.

இதற்கு மாறாக, ஆண்டவரின் பூமியில் தமக்களிக்கப்பட்ட பாகமானது தமக்கே சொந்தமென்றும், மற்றவர்கள் அதைத் துணிந்து தொடவுமுதலாய்க் கூடாதென்றும் நினைக்குந் தலைவரின் நடத்தை எவ்வளவோ பழிப்புக்குரியதாகின்றது. பலமுறைகளில் நேர்ந்திருப்பதுபோல், அஞ்ஞானிகள் நிறைந்துள்ள விடத்தில் சொற்பத் தொகையினரான கிறீஸ்துவர்கள் அஞ்ஞானத்தில் அகப்பட்டழிவதைக் கண்டும், அன்னார்களுக்கு ஞானோபதேசஞ்செய்து அவர்களைக் கண்காணிக்கும் வேலையைத் தம்மாலும் தம் குருக்களாலும் நிர்வகிக்கமுடியாதபோதும் அவர்களுக்குப் போதிக்க வெளி யுதவியைத் தேடிக்கொள்ள மறுக்குந் தலைவர்மேல் தாங்குந் தேவ நீதி எவ்வளவோ கண்டிப்பானதாயிருக்கும்! தேவ மகிமை, ஆத்தும இரட்சண்யமாகிய இவையிரண்டையுமே சதா தம் மனத்தில் வைத்துள்ள ஒரு கத்தோலிக்கு மிஷன் தலைவரானவர், அவசியமானபோது கிறீஸ்துவின் நாமம் எப்படியாவது

போதிக்கப்பட்டால் அஃதொன்றே போதுமானதென்று, வேறு சபையைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், வேறு ஜாதியாராயிருப்பினும் அதைப் பொருட்செய்யாமல் தம் பரிசுத்த வேலைக்கு உதவியாக வெளியிலிருந்து வேறே குருக்களை வரவழைப்பார். (பிலிப். I. 16). குருக்களைமட்டுமல்ல, கன்னியாஸ்திரிகளையுந் தருவித்து, தேவ உதவியுடன் விசுவாசப் பரம்புதலுக்கு அநுகூலமான யத்தனங்களென்று தாம் அறிந்திருக்கும் பள்ளிக்கூடங்கள், அநாதை மடங்கள், வைத்திய சாலைகள் முதலிய தர்ம காரியங்கள் நடத்தும்படி அவர்களை உதவிக்கொள்ளுவார்.

ஒற்றுமை.

இதுவுமன்றி திறமைவாய்ந்த மிஷன் தலைவர், தமதாதீன எல்லைகட்குப் புறத்தேயுள்ளவை யனைத்தும் தமக்கு அன்னியம் என்பதுபோல், தன்னெல்லைக்குள்ளாகவே தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டவராயிராமல்,கிறீஸ்துவபிறசிநேகத்தால் தூண்டப்பெற்று, அவர் மகிமையே தமக்கு அத்தியந்த பிரதானமானதெனக் கருதியவராய் அண்டை யயலிலுள்ள ஆதீனத் தலைவர்களுடன் ஒற்றுமையாய் நட்புரிமை பூண்டொழுக முயலுவார். சரியாய்ச் சொல்லவேண்டுமானல் ஒரு தேசமனைத்துக்கும் பொதுவான காரியங்கள் அநேகமுண்டு; அவைகளைப் பலரும் ஒன்று கூடியே சீர்திருத்தவேண்டும். மேலும் பல மிஷன் தலைவர்களும் குறித்தகாலங்களில் ஓரிடத்திற் கூடிப் பேசி, ஒருவரை யொருவர் உற்சாகப்படுத்திவருவது மிஷன்களுக்கு மிக்க நன்மை பயக்குமென்பது திண்ணம்.

சுதேச குருக்கள்.

கடைசியாக, மிஷன்களை யாள்வோருக்கு இருக்கவேண்டிய முக்கிய கவலை, தாங்கள் வசிக்கும் நாட்டிலுள்ள சுதேசிகளுள் சிலரைக் குருத்துவத்துக்குத் தெரிந்துகொண்டு, அவர்களை அத்தொழிலுக்கு ஏற்றபடி பயிற்றுவித்தலாம்; ஏனெனில், அவர்கள்தான் திருச்சபையின் எதிர்கால நம்பிக்கையின் அஸ்திவாரம். பிறப்பு, குணகுணங்கள், உணர்ச்சி, அபேட்சை முதலியவைகளால் ஒரு சுதேச குருவானவர் தம் ஜாதி ஜனங்களுடன் பிணைக்கப்பட்டிருப்பதால், சத்திய விசுவாசத்தை அவர்கள் புத்தியில் புகட்டுவதற்கான அபூர்வ சாமர்த்தியம் அவரிடமுண்டு; ஏனையோரினும் அவரே அவர்களை வற்புறுத்தி வசப்படுத்தும் வல்லமைவாய்ந்தவர். ஆனதுபற்றி அன்னிய நாட்டுக் குருக்கள் காலடியெடுத்துவைக்க முடியாத இடங்களிலுமுதலாய் இவர்கள் சுலபமாய்ச் செல்வது சகஜமாய் நேரிடுங் காரியமன்றோ!

ஆனல், நாம் எதிர்பார்க்கும் பலனையடைய விரும்பினல்,சுதேச குருக்களைத் திருப்திகரமான விதமாய்ப் பழக்கிப் பயிற்றுவித்தல் அத்தியாவசியமாம். குருப்பட்டம் பெறுவதற்குப் போதுமானதென்று கருதப்படும் அரையுங் குறையுமான பயிற்சி உதவவே உதவாது; ஆனல் நாகரிகமான ஜாதியாருக்குள் குருமாரைப் பழக்குவதுபோல், இவர்களுக்கும் நானவிதத்திலும் நிரம்பிய சாமர்த்தியமான சம்பூரணக்கல்வி பயிற்றுவித்தல்வேண்டும். அந்நிய தேச போதகக் குருக்களுக்கடியில் கீழ்த்தர பதவிகளை வகிக்கத்தக்க உதவி குருக்களாயிருக்கவேண்டுமென்கிற ஒரே நோக்கத்துடன் சுதேச குருக்களைப் பயிற்றுவிக்காமல்,அவர்கள் தேவ ஊழியத்துக்கு யோக்கியதையுடையவர்களாய் ஒரு நாள் தங்கள் ஜாதியாரைத் தாங்களே கௌரவத்துடன் நடத்தி யாளுந் திறமையுடையவர்களாகும்படிச் செய்தல்வேண்டும். உள்ளபடி கத்தோலிக்குத் திருச்சபை எவ்வாறு எல்லோருக்கும் பொதுவானதாயும், எந்த ஜாதியாரையும், எல்லா வருணத்தாரையுந் தழுவினதாயிருக்கிறதோ, அவ்வாறே ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் தங்களுக்குள்ளிருந்தே தங்களுக்கு தேவ நீதிகளைக் கற்பிக்கும் போதகர்களாகவும், ஞானமேய்ப்பர்களாகவும் கொள்ளத்தக்க பரிசுத்த குருக்களை அடைதல்வேண்டும்.

ஆதலால், எங்கெங்கே தேவ அழைப்புக்கு யோக்கியதையுடையவர்களான சுதேச குருக்கள் பயிற்சியிலுந் தொகையிலும் போதுமானபடி தேர்ந்து விளங்குகிறார்களோ, அவ்விடங்களிலெல்லாம் அன்னிய போதக குருக்களின் வேலை திருப்திகரமாய்நிறைவேறிற்றென்று கருதப்படல் வேண்டும்; அவ்விடங்களில் திருச்சபை ஸ்திரமாய் ஸ்தாபகமாயிற்றென்னலாம். மேலும் அங்கே ஒருக்கால் வேதகலாபனை கிளம்பி திருச்சபையை அழிக்க சேர்ந்தாலும், பகைவரின் தாக்குதலுக்கு அது அசையுமென்று அஞ்ச விடமிராதபடி அதன் வேர்களும் அஸ்திவாரங்களும் நன்றாயூன்றி உறுதிப்பட்டுப்போயிற்றென்று சொல்லலாம். மிஷன் தலைவர்கள் இந்த மகத்தான கடமையை அதற்குரிய அக்கரையுடன் கவனித்து, அதை ஜாக்கிரதையுடன் நிறைவேற்றும்படி அப்போஸ்தோலிக்கு ஆதீனம் எப்போதுந் தூண்டிக்கொண்டேவந்திருக்கிறது; அந்நிய தேசத்தாரின் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக ரோமாபுரியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பழய புதிய வேத கலாசாலைகளும், விசேஷமாய்க் கீழ்த்திசை சடங்கின் கலாசாலைகளும் இதற்கு மறுக்கப்படாத சான்றாகும். பாப்புமார் எவ்வளவுதான் வற்புறுத்தியபோதிலும், அநேக நூற்றாண்டுகளாக வேதம் போதிக்கப்பட்டுவந்த தேசங்களில் இன்னுங் கீழ்த்தரமான சுதேச குருக்களைத்தவிர மேற்றரமான குருக்களில்லாமலிருப்பதைக் காண்பது நமக்கு விசனகரமாயிருக்கிறது. ஆதியிலேயே சுவிசேஷ யொளியைப் பெற்றுக்கொண்ட ஜாதி

162033

யாரில் பலர் தங்கள் அநாகரீகத்தினின்று வெளிப்பட்டு, லௌகீக சாஸ்திர சம்பிரதாயங்களில் பேரோங்கினவர்களாய்ப் பற்பல உத்தியோகங்களிலும் உயர் பதவிக்கு வந்திருந்தும், தங்களை யாதரிக்கக்கூடிய சத்திய சுவிசேஷ திருச்சபையின் உதவியை அனேக நூற்றாண்டுகளாகப் பெற்றுவருகிற இவர்கள் தங்களை யாண்டு நடத்தத்தக்க தங்கள் சுயஜாதியாரான மேற்றிராணிமாரையாவது, தங்களாத்தும காரியங்களை விசாரிக்கத்தக்க தங்கள் சுயஜாதியாரான குருக்களையாவது இதுகாறும் பெற்றுக்கொள்ளாதிருக்கிறதைப் பார்க்கிறது நமக்கு விசனமாயிருக்கிறது. ஆகையால், இதுவரை வெவ்வேறிடங்களிலும் சுதேச குருக்களைப் பண்படுத்த அவரவரும் கையாடிய வழிவகை யுபாயங்களெல்லாம் பயனற்றவையெனத் தெளிவாகிறது.

இந்த அசௌகர்யங்களை நிவர்த்திசெய்யும் பொருட்டு, அவசியமுள்ளபோது ஒவ்வொரு தேசத்திலும் பல மேற்றிராசனங்களுக் கநுகூலமாயிருக்க, குருமடங்களை ஸ்தாபிக்கும்படி யல்லது ஸ்தாபத்துக்கான வழிவகைகளைத் தேடும்படி, அல்லது அம்மடங்கள் சரிவர நடக்கின்றனவாவென்று கவனிக்கும்படி விசுவாசப் பரம்புதல் சபையாருக்கு ஆக்ஞாபிக்கிறோம். விசேஷமாய் விக்காரியேட்களிலும் இன்னும் மற்ற மிஷன்களிலும் புதிதாய் சுதேச குருக்கள் ஏற்பட்டுத் தழைத்தோங்குவதைச் சர்வ ஜாக்கிரதையாய்க் கண்காணித்துவரும்படி அச்சபையாரை ஏவுகிறோம்.

உங்கள் சுயநாட்டை மறந்துவிடுங்கள்.

ஆத்தும இரட்சண்யத்தையும் கிறீஸ்துவ ஞானத்தைப் பரப்புதலையும் நேராய்த் தங் கரங்களிற்கொண்டு, ஆண்டவரின் திராட்சை சோலையைப் பயிரிடுவோரும், எம் பிரிய மக்களுமாகிய உங்களுக்கு இனி யுரைக்கப்போவதென்னவென்றால்: துவக்கத்திலேயே நீங்கள் செய்யும் அலுவலின் மகத்துவமும் கனகனமும் உங்கள் கண்ணெதிரில் எப்போதும் இருக்கக்கடவது. மரண நிழலில் அயர்ந்திருப்பவர்களின் கண்களுக் கெதிரே ஞான ஒளியைப் பிரகாசிக்கச்செய்து, தங்கள் நாசத்துக்கு விரைந்தோடுவோருக்கு மோட்ச வாசற் கதவைத் திறந்துவைத்தல், லௌகீக நன்மைகளுக்கு அணுவளவும் சம்பந்தமில்லாத மேலான தெய்வீக அலுவலன்றோ! "உன் ஜாதி ஜனங்களையும், உன் தந்தையின் வீட்டையும் மறந்துவிடு" (சங்கீ. XLIV. 11) என்னும் வேத வாக்கியத்தை உங்கள் ஒவ்வொருவருக்கும் நமதாண்டவரே சொல்வதாகப் பாவித்துக்கொண்டு, கிறீஸ்துவின் இராச்சியபாரத்தையேயன்றி, லௌகீக மனித இராச்சியபாரத்தைப் பரவச்செய்வது உங்கள் அலுவல் அல்லவென்பதையும், இவ்வுலகப்பற்றுள்ள எந்தத் தேசத்தாரையுமல்ல, மறுவுலகப்பற்றுள்ளவர்களையே நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதென்பதையும் உங்கள் ஞாபகத்தில் வையுங்கள். போதக குருக்களில் யாராவது தன்னுடைய கௌரவ நிலைமையை மறந்து, மோட்ச ராச்சியத்தினும் உலக இராச்சியத்தையே பிரதானமா யெண்ணி அதன் பூலோக மகிமையையும் வல்லமையையும் அதிகப்படுத்த முயன்றால், அது மெய்யாகவே விசனிக்கத்தக்கதாம். இது, ஒரு குருவுக்கு ஆத்துமாக்கள்மேலுள்ள ஆசையாலுண்டாகும் சுறுசுறுப்பைக் கொன்று, ஜனங்கள்மேல் அவர் வகிக்கும் அதிகாரத்தை வேரறுத்து, அப்போஸ்தலத்துவத்தை நாசமாக்கும் ஒரு கொள்ளைநோயாகும். ஜனங்கள் எவ்வளவு நாகரீகமற்றவர்களும் காட்டுமிருண்டிகளுமாயிருப்பினும், ஒரு போதக குரு தங்களிடம் எதிர்பார்ப்பதென்னவென்று வெகு சுலபமாய்க் கண்டுகொள்வதுடன், அவர் எதிர்பார்ப்பது தங்கள் ஆத்தும நன்மைக்கு ஏதுவானதா அல்லவாவென்பதையும் தெரிந்துகொள்வதில், வெகு சாமர்த்தியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். குருவானவர் லௌகீக விஷயங்களில் நாட்டமுடையவராய், யாவற்றிலும் ஒரு அப்போஸ்தலரைப்போல் நடந்துகொள்வதற்குப்பதிலாய், தனது தேச நன்மையை விர்த்திசெய்யத் தேடுவதாய்த் தோன்றுகிறாரென்று வைத்துக்கொள்வோம்; ஜனங்கள் உடனே அவருடைய எண்ணத்தில் சந்தேகங்கொண்டு, கிறீஸ்து வேதம் சில அன்னிய ஜாதியாருக்கே சொந்தமானதென்றும், அந்த வேதத்தைச் சேர்வதால் ஒரு அன்னிய நாட்டதிகாரத்துக்குத் தாங்களுட்பட்டுத் தங்கள் ஜாதீய பெருமையை யிழக்க நேரிடும் என்றும் அவர்கள் நம்ப இடமுண்டாகிறது.

கடந்த சில வருஷங்களாகப் பிரசுரிக்கப்பட்டுவரும் மிஷன் விருத்தாந்தங்களை படித்துப் பார்த்ததில் அவை எவ்வளவோ விசனத்துக்குரியவையாயிருக்கின்றனவென தெரியவருகின்றது. ஏனெனில் போதக குரு தம் சொந்த தேச ஆளுகையை விர்த்திசெய்வதில் கொள்ளும் கவலையைப்போல் அவ்வளவு கவலை தேவ இராச்சியத்தைப் பரவச்செய்வதில் கொள்வதாகத் தெரியவில்லை. இத்தகைய பிரசுரங்களால், அஞ்ஞானிகள் வேதத்தின்மட்டில் மனங்கொள்ளாமல், அவர்களுக்கு எவ்வளவு இடையூறு நேர இடமிருக்கிறது என்பதை, அவ்விருத்தாந்தங்களை யெழுதுவோர் தெரிந்துகொள்ளாமலிருப்பது எமக்கு மிக்க ஆச்சரியத்தைத் தருகின்றது. கத்தோலிக்கு வேத போதகர் என்னும் நாமத்துக்குரிய ஒருவர் நடந்துகொள்ளும் விதம் இதுவல்ல; ஆனால் தாம் தம் தேசத்தின் தூதனாயிராமல் கிறீஸ்துவின் தூதனே என்பதை சதா மனதில்

வைத்து, அவர் சர்வேசுரனை மெய்யாகவே மனமாற ஆராதிக்கும் மனிதரடங்கிய சத்திய வேத குருவென்றும், அவர் எந்த ஜாதியாருக்கும் அன்னியர் அல்லவென்றும், அவ்வேதத்தில் "அஞ்ஞானியென்றும், யூதனென்றும், விருத்தசேதனம் உள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றும், நாகரீகமற்றவனென்றும், சீத்தியன் என்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனன் என்றுமில்லை. ஆனால் கிறீஸ்துநாதரே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" (கொலோ. III. 11) என்றும் யாவரும் அங்கீகரிக்கும்படி நடந்துகொள்ளவேண்டியது. போதக குரு சாக்கிரதையாய்த் தடுக்கவேண்டிய மற்றொரு விபத்துமுண்டு; அதாவது ஆத்தும லாபத்தையேயன்றி மற்றொரு லாபத்தையுந் தேடாதிருத்தலே. ஆனால் அதைப்பற்றி நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் பொருளாசையால் தூண்டப்பட்ட ஒருவர் தாம் செய்யவேண்டியபிரகாரம் சர்வேசுரனுடைய மகிமை யொன்றையே தேடி, மற்றவர்களை ஞானத்தின் வழியில் கொண்டுவருவதால் அந்த மகிமையைப் பின்னும் உயர்த்துவதில் தன் பொருளையும் உயிரையும் முதலாய் பரித்தியாகஞ்செய்யத் தயாராயிருப்பதெங்ஙனம்? மேலும் பொருள்தேடும் ஆவல் பேராசையாய் மாறினால், அத்தகைய மனிதன், அஞ்ஞானிகள்மேல் தனக்குள்ள செல்வாக்கை வெகுவாயிழந்துவிடுவான்; மனிதர் சமுகத்திற் பழிப்புக்குரியதும், தேவ இராச்சியத்துக்கு அபாத்திரமானதுமான தோஷம் இதனிலும் வேறு கிடையாது. திமோத்தியென்பவரைத் தூண்டினதுபோல் மற்றவர்களையெல்லாம் தூண்டிய அஞ்ஞானிகளின் அப்போஸ்தலர் இது விஷயத்தில் சொல்லும் வசனத்தை சுவிசேஷப் போதகரனைவரும் பின்பற்றுவார்களாக. அதாவது: "உண்ண உணவும், உடுத்த உடையுமிருந்தால், இவைகளே நமக்குப் போதுமானவை என நாம் மனரம்மியமாயிருத்தல்வேண்டும்" (திமோத், VI. 8) என்பதே. அவ்வப்போஸ்தலர் தம்மை இவ்விஷயத்தில் எவ்வளவு பரித்தியாகஞ் செய்தாரென்றால், தாம் நிறைவேற்றிவந்த மகா பொறுப்புள்ள ஆத்தும ஈடேற்றத்தொழிலின் கவலையால் பீடிக்கப்பட்ட சமயங்களில்முதலாய் தம் சொந்தக் கைப்பாட்டினாலேயே ஜீவித்துவந்தார்.

போதக குருக்களின் பயிற்சி.

அப்போஸ்தோலிக்கு வேலையைத் தொடங்குமுன் ஒரு போதக குரு நன்றாய்ப் படித்துப் பூரண பயிற்சியடைதல் அவசியமென்பது தெரிந்தவிஷயமே. நாகரீகமில்லாத ஜாதியாருக்கு வேதத்தைப் பிரசங்கிக்க ஒரு குருவானவர் நன்றாய்ப் படித்த கல்விமானாயிருக்கவேண்டியது அநாவசியம் என்பார் சிலர். தேர்ந்த படிப்பைவிட பக்திக்குரிய நல்லொழுக்கமே ஆத்தும இரட்சண்ய வேலைக்குத் தகுந்தது என்பது மெய்தான்; ஆனால் ஒருவர் தன் பரிசுத்த அலுவலை அனுகூலமாய் நடத்துவதற்குத் தமக்குப் போதுமான படிப்பில்லாமையே ஒரு பெரிய இடையூறாயிருப்பதாக தாமே அநுபோகத்தால் கண்டுணரலாம். அவரிடத்தில் வேண்டிய புஸ்தகங்கள் இருக்கமாட்டா; தமக்கு ஆலோசனை கொடுக்கக்கூடிய திறமைவாய்ந்தவர்களும் அருகாமையில் இரார்கள். என்றாலும் அவரைக் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி வேத மறுப்புகளை நிவர்த்திசெய்து, விளங்காத வேதக் கொள்கைகளை அவர் விளங்கவைத்தல்வேண்டும். ஒரு போதகர் எவ்வளவுக்கு நன்றாய்ப் படித்திருக்கின்றாரோ, அவ்வளவுக்கும் அவருக்கு மதிப்பதிகம்; விசேஷமாய் கல்வியின்மட்டில் நன்கு மதிப்புள்ள ஜாதியார் மத்தியில் அவர் வசிக்க நேர்ந்தால், அவருக்கு அங்கே யுண்டாகும் மதிப்புக்களவில்லை. வேத விஷயங்களில் சத்திய போதகர் அசத்திய போதகருக்கு சற்றேனும் குறைந்த படிப்பாளிகளாயிருந்தால், அதைவிடக் கேவலமானதும் விசனத்துக்குரியதும் வேறொன்றுமில்லை. குருத்துவத்துக்குச் சர்வேசுரனால் அழைக்கப்படும் மாணவர்களைப் போதக வேலைக்காகப் படிப்பிக்கும்போது, அவர்கள் வேத சாஸ்திரங்களையும் லௌகிக சாஸ்திரங்களையும் நன்றாய்ப் படித்துப் பாண்டித்தியமடைவதற்கான சகல முயற்சியும் செய்யவேண்டியது. விசுவாசப் பரம்புதலுக்காக எற்பட்டுள்ள உர்பன் போண்டிபிக்கல் கலாசாலையில் நியாயமும் பொருத்தமுமான இவ்வகைப் படிப்பைக் கற்பிக்கவேண்டுமென்பது நமது விருப்பம்; அக்கலாசாலையில் தகுந்த ஆசிரியர்களை நியமித்து மிஷன்களுக்காக வேண்டிய சாஸ்திரங்களைக் கற்பிக்கும்படி நாம் உத்தாரவளிக்கிறோம்.

சுதேச பாஷைகள்.

எந்த ஜாதியாரின் ஆத்தும ஈடேற்றத்துக்காக ஒரு குருவானவர் உழைக்கிறாரோ, அந்த ஜாதியாருக்குள் வழங்கும் பாஷையை அவர் நன்றாய்க் கற்றிருத்தல் அவர் தம்முடைய குருத்துவத் தொழிலுக்குச் செய்யும் ஆயத்தங்களில் முக்கியமானதாகும். அவர் அந்தப் பாஷையை அரையுங்குறையுமாய்மட்டும் படித்திருந்தால் போதாது; அதை நன்றாய்ப் பேசவும் எழுதவும் போதுமான பூரண பாண்டித்யத்தை யடைந்திருக்கவேண்டும். அவர் பண்டிதர், பாமரர் யாவருக்கும் உழைக்கக் கடமைப்பட்டவராதலின் அவர் தேச பாஷையில் பேசினால் ஜனங்கள் அவருடைய அமிர்தப் பிரசங்கங்களை எவ்வளவோ பிரியத்துடன் கேட்கவருவார்கள் என்று அவரே தெரிந்துகொள்ளலாம். உற்சாகமுள்ள ஒரு குரு

வானவர் ஞானோபதேசஞ்செய்யுங் கடமையை உபதேசியாரிடம் விட்டுவிடாமல், இதையே தமது முக்கிய அலுவலாகப் பாவித்து, அவ்வேலையை தாமே முன்னின்று நடத்தவேண்டும்; ஏனெனில், சர்வேசுரன் அவரை யனுப்பியது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேயன்றி, வேறு யாதொரு காரணத்தையு முன்னிட்டல்லவே. நமது பரிசுத்த வேதத்தின் தூதராகவும், அதை விளக்கி வியாக்கியானிப்பவராகவும், சில சமயங்களில் செல்வாக்குள்ளவரிடம் புழங்கவும், அல்லது கல்விமான்கள் நிறைந்த சபையில் பிரசங்கிக்கவும் அவரைத் தெரிந்துகொள்ளலாம். அப்போது அவர் அவர்களுடைய சுயபாஷையில் பேசவும், தம்முடைய கருத்துகளை விளக்கவும் கூடாமற்போனால் தம் கௌரதையைக் காப்பாற்றிக்கொள்வதெப்படி? கீழ்ப்பிரதேசங்களில் கத்தோலிக்கு நாமத்தைப் பரப்புவதற்காக, ரோமாபுரியில் ஒரு விசேஷித்த வித்தியாசாலையை ஸ்தாபித்ததின் முக்கிய நோக்கம் இதுவேயாம். அங்கே வாசிப்பதால், கீழ்நாடுகளில் போதகஞ் செய்யப்போகும் குருமார்கள் அத்தேச பாஷைகளையும் பழக்க வழக்கங்களையும் நன்றாய்க் கற்றறிந்து பாண்டித்யம் அடையலாம். இந்தக் கலாசாலையில் படித்துத் தேறும்பொருட்டுத் தகுந்த ஏற்பாடுகள் செய்திருப்பதாக நமக்குத் தெரியவருகிறபடியால், அன்னிய தேசங்களுக்குப் போகவிருக்கும் வேதபோதக மாணவரை அங்கே யனுப்பிப் பயிற்றுவிக்கும்படியாய், கீழ்நாடுகளில் உழைக்கும் போதக சபைகளின் தலைவர்களையெல்லாம் வெகு விநயமாய்த் தூண்டுகிறோம்.

போதக குருவின் புண்ணிய குணங்கள்.

அப்போஸ்தோலிக்கு வேலைக்குத் தம்மைத் தகுந்தவராக்க விரும்பும் ஒவ்வொருவரும் முக்கியமாய் அடைந்திருக்கவேண்டிய முதன்மையான காரியம் நாம் முற்கூறிய சீவிய பரிசுத்தத்தனமாம். ஏனெனில் சர்வேசுரனைப்பற்றி போதிப்பவர் எவரும் சர்வேசுரனுடைய மனிதராயிருத்தல்வேண்டும்; அப்படியே பாவத்தைப் பகைக்கும்படிப் போதிப்பவர் பாவத்தைத் தாமே பகைக்கவேண்டும். நீதி நியாயம் பாராமல் ஐம்புல உணர்ச்சியால் நடத்தப்படும் அஞ்ஞானிகள் மத்தியில் வாக்குப் பிரசங்கத்தைக்காட்டிலும் செய்கை பிரசங்கமே மிக்கப் பிரயோசனகரமானது. ஒரு போதக குரு சகல சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்று விற்பன்னராய் விளங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம்; அவருடைய அபார புத்தியும் சிறந்த ஞானமும் தூய்மையான சீவியத்தால் பிணிக்கப்பட்டிராவிட்டால் ஜனங்களை மனந்திருப்புவதில் அந்த ஞானம் பயன்படாததுமன்றி, அதனால் தனக்கும் பிறருக்கும் தீங்கு நேரினும் நேரலாம். ஆதலால் தாழ்ச்சியிலும், கீழ்ப்படிதலிலும், கற்பிலும், விசேஷப் பக்தியிலும், ஜெபத்திலும், சர்வேசுரனோடு ஐக்கியப்பட்டிருப்பதிலும், எந்நேரமும் ஆத்தும இரட்சண்ணியத்துக்காக சர்வேசுரனை மன்றாடுவதிலும் அவர் ஒரு முன்மாதிரியாக இருப்பாராக. அவர் சர்வேசுரனுடன் எவ்வளவுக்கெவ்வளவு ஒன்றித்திருக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு தேவ வரப்பிரசாதத்திலும் தேவ உதவியிலும் அவர் விசேஷ பங்கடைவார். அவர் பின்வரும் அப்போஸ்தலரின் அமுத மொழிகளுக்குச் செவிசாய்ப்பாராக: "ஆதலால் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட நீங்கள் பரிசுத்தரும் பிரியமுள்ளவர்களுமாய் உருக்கமான இரக்கத்தையும், சாந்தத்தையும், தாழ்ச்சியையும், அடக்க வொடுக்கத்தையும், பொறுமையையும் தரித்துக்கொள்ளுங்கள்" (கொலோ. III. 12) இந்தப் புண்ணிய குணங்கள் மூலியமாகத்தான் சத்தியம் ஆத்துமங்களுக்குள் நேராயும் சுலபமாயும் நுழையும்; சகல இடையூறுகளும் விலகும். இவற்றைத் தடுத்தெதிர்க்கக்கூடிய சித்தப் பிடிவாதமே கிடையாது என்னலாம். நேசத்தால் கிறீஸ்துநாதரைப்போல் ஏவப்பட்டு அஞ்ஞானிகளுக்குள் மிக்கத் தாழ்ந்தவர்களையுமுதலாய் தேவ இரத்தத்தால் இரட்சண்யமடையச்செய்து, சர்வேசுரனுடைய பிள்ளைகளுக்குள் கொண்டுசேர்க்கத் தயாராயுள்ள ஒரு போதக குரு அவர்களுடைய முரட்டுத்தனத்தைக்கண்டு சினங்கொள்ளார்; அவர்கள் துர்க்குணங்களைக்கண்டு வெறுப்படையார்; அவர்களைத் தூஷிக்கவுமாட்டார்; புறக்கணிக்கவுமாட்டார்; அவர்களை குரூரமாயும் கேவலமாயும் நடத்தவுமாட்டார். ஆனால் அவர்களை கிறீஸ்துவ நேசத்துக்குரிய சகல நன்முயற்சிகளால் தூண்டி, தம் வசப்படுத்தி, நல்ல ஆயனுகிற கிறீஸ்துவின் அரவணைப்புக்குள் கொண்டுவந்து சேர்க்கப் பிரயாசைப்படுவார். இவ்விஷயத்தை ஆழ்ந்து தியானிக்கும்பொருட்டு வேதப் புத்தகத்தில் சொல்லியிருப்பதாவது:—"ஆண்டவரே சகல காரியங்களிலும் உமது சுபாவம் எவ்வளவோ நல்லதும், மதுரமானதுமாம்! இதினாலேதான் அல்லோ தவறிப்போகிறவர்களைச் சிறுகச் சிறுகத் தண்டிக்கிறீர். ஆண்டவரே அவர்கள் தங்கள் அக்கிரமங்களைவிட்டு, உமது பேரில் விசுவாசம் கொள்ளும்படியாய், அவர்களை எச்சரித்து, அவர்கள் குற்றஞ்செய்யும் வழிகளைப்பற்றி அவர்களிடம் பேசுகிறீர்........... ஆனால், நீரே வல்லமையின் கர்த்தரானதால் அமரிக்கையோடு தீர்மானிக்கிறீர்." (ஞானாகமம். XII. 1, 2, 18) இத்தகைய கிறீஸ்துவின் தூதர் ஒருவர், தான் செய்த தீர்மானத்தினின்றும் வழுவும்படிச் செய்யக்கூடிய துன்பதுரிதங்களும் சோதனைகளும் உண்டோ? ஒன்றுமேயில்லை. சர்வேசுரனுக்குப் பிரியமான இந்த உன்னத

வேலையை கைக்கொண்ட ஒருவர் நரகத்தின் வாயினின்றும் ஒரே ஒரு ஆத்துமாவைக் காப்பாற்றுவதற்கு, துன்பதுரிதங்கள், உழைப்பு, நிந்தை, வறுமை, பசி, வேண்டுமானால் குரூர சாவையுமுதலாய் தைரியமா யெதிர்க்கப் பின்னிடையார்.

இவ்வாறு தீர்மானஞ்செய்து, தேவ ஏவுதல் பெற்று, ஆண்டவராகிய கிறீஸ்துநாதருடையவும் அப்போஸ்தலருடையவும் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, சர்வேசுரனிடம் முழு நம்பிக்கை வைத்து, தம் வேலையைத் தொடங்குபவர் இவ்வேலையோடு தம்மை முற்றிலும் பிணைத்துக் கொள்வார். நாம் முன்சொன்னதுபோல் கிறீஸ்துவ ஞானத்தை பிரசங்கிப்பது முழுதும் தெய்வீக தொழிலாயிருக்கின்றது. ஏனெனில் சர்வேசுரன்மாத்திரமே ஆத்துமத்துக்குள் ஊடுருவிச் செல்லக்கூடியவர். உண்மையின் மேலான ஒளியை மனதில் பிரகாசிக்கச்செய்கிறவர். புண்ணிய தீபத்தினால் இருதயத்தில் அனலை மூட்டுகிறவர். தனக்கு நன்மையும் உண்மையுமெனத் தெரிந்ததை மனிதன் தாழ்ச்சியோடு பின்பற்றி நடக்க அவனுக்கு வேண்டிய பலத்தை யளிப்பவர். சர்வேசுரன் தம் சார்பாயில்லாவிட்டால், அவர் பிரயத்தனங்கள் யாவும் வியர்த்தமென்று சொல்வது இதனாலன்றோ! மன்றாடிக் கேட்போருக்குப் பலனளிக்கத் தவறாத தேவனுடைய கிருபையினுதவியில் நம்பிக்கைவைத்து அவர் தாம் செய்த தீர்மானத்தின்படி தம்மாலானப் பிரயாசையெல்லாம் பட்டுழைப்பாராக.

கிறீஸ்துவேதம் உண்டான காலமுதல் சுவிசேஷப் போதகருக்கு சிறந்த உதவிபுரிந்து, மட்டற்றவிதமாய் உழைத்துவரும் பெண்களைப் பற்றி இச்சந்தர்ப்பத்தில் நாம் பேசத் தவறலாகாது. சர்வேசுரனுக்கே தம்மைக் கையளித்து, அன்னிய தேசங்களுக்குச்சென்று, அங்கே பிள்ளைகளின் படிப்புக்காகவும் கணக்கற்ற பற்பல தர்ம விஷயங்களுக்காகவும் உழைத்துவரும் கன்னியர்களைப்பற்றி நாம் புகழ்ந்துபேசாமலிருக்கக்கூடுமா? நாம் இவ்வாறு அவர்கள் வேலையை மெச்சிப் பேசுவதால், அவர்கள் திருச்சபையின் ஊழியத்தில் மேன்மேலும் அதிக ஊக்கமுந் தைரியமுங்கொண்டு உழைக்கவேண்டுமென்பதே எமது விருப்பம். மேலும் அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு புண்ணிய சாங்கோபாங்கத்தில் வளர்ந்து வருகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் உழைப்பும் பலனளிக்குமென்பதை அவர்கள் உறுதியாய் நம்புவார்களாக.

மிஷன்களுக்குதவி செய்தல்.

இரக்கமுள்ள சர்வேசுரனுடைய உதவியால் சத்திய வேதத்தில் சேர்ந்து அதன் அளவற்ற நன்மைகளில் பங்கடையும் பாக்கியம்பெற்றவர்கள் யாவருக்கும் நாம் இப்போது எழுதுவதாவது: அஞ்ஞானிகள் மத்தியிலுழைக்கும் மிஷன்களுக்கு அவர்கள் உதவி செய்யவேண்டிய பரிசுத்த கடமைகள் எத்தன்மையானவை யென்று அவர்கள் முந்தமுந்த யோசிப்பார்களாக. "ஏனெனில் (சர்வேசுரன்) அவர்கள் ஒவ்வொருவருக்கும் தன் அயலானைப்பற்றிய கட்டளை கொடுத்திருக்கிறார்." (எக். XVII. 12) நமது அயலானுக்கு நம்மாலாகவேண்டியவை அதிகமாயிருக்கிறபடியால், அக்கட்டளை பின்னும் அத்தியாவசியமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. மெய்யாகவே நமது சகோதர உதவிக்குரியவர்கள், சர்வேசுரனை அறியாமல் குருட்டாட்டத்துக் கடிமைகளாகி பசாசின் அதிகாரத்தில் அஞ்ஞானிகளாய் சீவித்து உயிர்வாழ்கிற இவர்களைவிட நம்மால் உதவி செய்யப்படவேண்டியவர்கள் வேறெவரேனும் உண்டோ? ஆதலால் அவர்களை மனந்திருப்புவதற்காக விசேஷமாய் போதக குருக்களுக் குதவி புரியும்படி தம்மாலான சகாயத்தைச் செய்கிறவர்கள் யாவரும் ஒரு அரிய பெரிய வேலையில் தமக்குள்ள கடமையை நிறைவேற்றி, தேவ கிருபையால் தாம் பெற்றுள்ள விசுவாசத்துக்காகச் சர்வேசுரனுக்குச் செலுத்தவேண்டிய நன்றியறிதலையும் மிக்க இதமான வழியில் செலுத்துகிறவர்களாகிறார்கள்.

ஜெபத்தால் செய்யக்கூடிய உதவி.

போதக குருக்களின் இடையறாவேண்டுகோளுக்கிணங்க மூன்றுவிதமாக மிஷன்களுக்கு உதவி செய்யக்கூடும். அவற்றில் அவர்களுடைய வேலையை சர்வேசுரன் ஆசீர்வதிக்கும்படி மன்றாடுவது முதன்மையானது. இது எல்லோருஞ் செய்யக்கூடியது. "நான் நட்டேன், அப்போல்லோ தண்ணீர் பாய்ச்சினார். ஆனால் சர்வேசுரனே பலன்கொடுத்தார்" என்று அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல், தேவ கிருபையின் உதவி யிராவிடில் போதக குருவின் வேலையனைத்தும் வியர்த்தமாகுமென்று நாம் அடிக்கடி சொல்லியிருக்கிறோம். இந்தத் தேவ கிருபையை அடைவதற்கு ஒரே ஒரு வழியுண்டு. அதாவது: இடைவிடாத தாழ்ச்சியுள்ள ஜெபமாமே; ஏனெனில், "அவர்கள் எது சம்பந்தமாக மன்றாடியபோதிலும், அவர்களுக்கு அது என் பிதாவால் கொடுக்கப்படும்" என்று நமதாண்டவரே சொல்லுகிறார். எத்தகைய ஜெபம் கேட்கப்படாவிட்டாலும், இவ்விஷயமாய்ச் செய்யபப்டும் ஜெபம் அவசியம் கேட்கப்படும். ஏனெனில் இந்த வேலையைப்போல் உன்னதமானதும் சர்வேசுரனுக்குப் பிரியமானதுமான வேலை வேறொன்றுமில்லை. அமலெக்கியரோடு போரிடும் இஸ்ராயேலருக்கு உதவி புரியும்படி, மோயீசன் மலைமேல் நின்று தன் கரங்களை

யுயர்த்தி மன்றாடியதுபோல், நமதாண்டவரின் திராட்சத்தோட்டத்தில் உழைக்கும் சுவிசேஷ போதகருக்காக கிறீஸ்துவர்கள் எல்லாரும் மிக்க சிரத்தையுடன் வேண்டிக்கொள்ளவேண்டியது. இக்கடமையைச் சரியாய்ச் செலுத்தும்பொருட்டே ஜெப அப்போஸ்தலர் சபை முக்கியமாய் ஏற்பட்டிருக்கிறபடியால், அதில் விசுவாசிகள் அனைவருஞ் சேரத்தவறலாகாது. எல்லோரும் பணவுதவி செய்ய முடியாவிட்டாலும் ஜெப உதவியேனும் செய்து அப்போஸ்தோலிக்கு வேலையில் தாங்களும் கொஞ்சமாவது பங்குபெற வேண்டியதவசியம்.

போதக குருக்கள் தேவை.

போதக குருக்களில்லாத குறையைநிவர்த்தி செய்யவேண்டியது. இந்தக் குறை முன்னிலும் இப்போது நிகழ்ந்த சண்டையினால் பயங்கரத்துக்குரியவிதமாய்ப் அதிகரித்திருக்கிறது. இதனால் நமதாண்டவருடைய திராட்சத்தோட்டத்தின் பெரும் பாகத்தில் உழைக்க ஆட்கள் கிடையாது. இதைப்பற்றியே, சங்கைக்குரிய சகோதரரே, நீங்கள் இவ்விஷயத்தில் சுறுசுறுப்பாய் அக்கரைகொள்ள நாம் உங்களை மிகவுங் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் கண்காணிப்பிலிருக்கும் மடங்களில் அப்போஸ்தலத்துவ அழைப்புக்கு அருகராயிருப்போரை நீங்கள் ஜாக்கிரதையாய் உற்சாகப்படுத்தி குருக்களாக்குவீர்களானால் உங்களிடத்தில் சிறந்து விளங்கும் உங்களுடைய வேதாபிமானத்துக்கிசைந்த ஓர் கிருத்தியத்தைச் செய்தவர்களாவீர்கள். அந்நிய மிஷன்களுக்கு குருக்களைக் கொடுப்பது உங்கள் ஆதீனங்களுக்கு நஷ்டமென்று நினைத்து, தப்பறையான அல்லது லௌகீகத்துக்கடுத்த காரணங்களால் மோசம்போகாதீர்கள். நீங்கள் வெளிநாடுகளுக்கனுப்பும் ஒரு குருவுக்குப்பதிலாய், உங்கள் ஆதீனங்களில் உபயோகமான வேலை செய்ய பல குருக்களைச் சர்வேசுரன் கொடுப்பார்.

போதக குருக்களைத் தெரிந்தெடுத்தல்.

மிஷன் வேலை செய்யும் சந்நியாச சபைகளையும் மற்றும் சபைகளையும் ஆளுவோரைப்பற்றிப் பேசுமிடத்தில், அத்தகைய வேலைக்குத் தங்கள் சீவிய தூய்மையிலும், ஆத்துமாக்கள்மட்டில் உள்ள அக்கரையிலும் மற்றவர்களைவிட அதிகமாய்ச் சிறந்து விளங்குகிறவர்களையே நியமிக்கும்படியாய் நாம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். மேலும் அக்குருக்கள் ஓரிடத்தில் அஞ்ஞான அந்தகாரத்திலிருந்த அநேகரை மனந்திருப்பி தங்கள் வேலையைத் திருப்திகரமாகச் செய்துமுடித்து, அங்கே திருச்சபையை செழித்தோங்கும்படி ஸ்தாபித்துவிட்டால், கிறீஸ்துநாதரின் முதல்தர வீரசூரர்களான அக்குருக்களை பசாசின் அடிமைத்தனத்தினின்று வேறொரு ஜாதியாரை மீட்க அவ்விடத்திற்கு அனுப்ப வேண்டியது. அப்படிப் போகிறவர்கள் தாங்கள் கிறீஸ்துநாதருக்காக சம்பாதித்தவைகளை மனப்பூர்வமாய் மற்றவர்களிடம் ஒப்பித்துவிடவும். அதினால் அவர்கள் அந்த இடத்தில் அவ்வேலையை தொடர்ந்து நடத்தி அதை விருத்தியாக்குவார்கள். ஆத்துமாக்களின் அறுவடையை அவர்கள் சேகரித்ததற்காக தங்களுடைய சபைக்குச் சர்வேசுரனுடைய வரங்களை ஏராளமாய்ப் பெற்றுக்கொள்வார்கள்.

நன்கொடையால் உதவி செய்தல்.

கடைசியாய், மிஷன்களை நடத்துவதற்கு பணம் அதிகமாய் வேண்டியிருக்கிறது; சண்டை நடந்தபோது, பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலிய வரும்படிக்கேதுவான அநேக ஸ்தாபனங்கள் அழிந்துவிட்டபடியால், அந்த மிஷன்களின் தேவையும் அதிகரித்துவிட்டது. தங்கள் நிலைமைக்குத் தகுந்தாப்போல் உதாரமாய்க் கொடுக்கும்படியாய் சகல விசுவாசிகளையுங் கேட்டுக்கொள்ளுகிறோம். ஏனெனில் "இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன் சகோதரன் இக்கட்டுப்படுகிறதைக்கண்டும், அவனுக்கு இரங்கானாகில் தேவ சிநேகம் அவனிடத்தில் இருக்கிறதெப்படி?" (I. அருளப். III. 17.) வறுமையால் வருந்துவோரைப்பற்றி அப்போஸ்தலராகிய அருளப்பர் இவ்வாறு சொல்லியிருக்கிறார். கணக்கற்ற ஜனங்களை வறுமை, தரித்திரம் முதலிய பல துன்பங்களிலிருந்து காப்பாற்றுவதுமல்லாமல் எண்ணிறந்த ஆத்துமாக்களை அலகையின் அடிமைத்தனத்தினின்று மீட்டு தேவ மக்களின் சுயேச்சைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கிடமாயுள்ள இவ்விஷயத்துக்குத் தர்மம் செய்யவேண்டும் என்னும் சட்டத்தால் உண்டாகும் கடமை எவ்வளவோ பரிசுத்தமானதாம்! ஆதலால் மிஷன்களின் உதவிக்காக ஏற்பட்டிருக்கும் பரிசுத்த சபைகளுக்கு கத்தோலிக்கர் அனைவரும் உதார குணத்துடன் உதவி செய்ய வேண்டுமென்று ஆசிக்கிறோம்.

அடிக்கடி நமக்கு முன்னிருந்த பாப்புமாரால் புகழப்பட்டதும் சத்திய வேதப்பரம்புதலுக்காக முதன்முதல் உண்டானதுமான சபை விசுவாசப் பரம்புதல் சபையேயாம். இச்சபையால் விளையும் பலன் இன்னும் அதிகமாய் அதிகரிக்கும்படி அப்பரிசுத்த சபையார் விசேஷ விதமாய் கவனிக்க நாம் ஏவுகிறோம். ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்ட மிஷன்களுக்கும் இனி ஸ்தாபிக்கப்படப்போகும் புது மிஷன்களுக்கும் வேண்டிய உதவிகளையெல்லாம் அச்சபை செய்யவேண்டியது. ஆனால், இது விஷயத்தில் கத்தோலிக்கர் சும்மா இருத்தற்கூடாது; பணம் விரையஞ்

செய்து தப்பறைகளை எங்கும் பரவச்செய்துவர அநேக மனிதர் முன்னுக்குவரும்போது, சத்திய மார்க்கத்தைப் பரப்பும் வேலையில் குறையுண்டாகும்படி கதோலிக்கர் விடமாட்டார்களென்று நம்புகிறோம்.

நாம் மிகவாய் சிபார்சு செய்யும் இரண்டாவது சபை, பரிசுத்த பாலர் சபையாம்; அதன் வேலை மரணத்தருவாயிலுள்ள அஞ்ஞானப் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுத்தலாம். இது எல்லோருக்கும் பிரியமாயிருக்கக்கூடியதாமே. ஏனெனில், அதில் பிள்ளைகள்முதலாய் அங்கத்தினராய்ச் சேரலாம்; அப்படிச் சேர்வதால் அப்பிள்ளைகள் தாம் பெற்றுள்ள வரமாகிய விசுவாசத்தின் கனகனத்தை யறிந்து அகமகிழவும், அந்த அரிய வரத்தை மற்றவர்களும் பெறுவதற்கான உதவி செய்யவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். மிஷன்களில் சுதேச குருக்களுடைய படிப்புக்காகவும் போஷணைக்காகவும் ஏற்பட்டுள்ள அர்ச். இராயப்பர் சபையைப்பற்றியும் நாம் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறோம். மேலும், காலஞ்சென்ற பதின்மூன்றாம் சிங்கராயர் என்னும் பாப்பானவர், ஆபிரிக்கா தேசத்தின் அடிமைகளை மீட்பதற்காக, உலகமெங்குமுள்ள கோவில்களிலெல்லாம் மூன்று இராஜாக்கள் திருநாளன்று பணத்தண்டல்செய்வதினால் வசூலாகும் தொகையை விசுவாசப் பரம்புதல் சபையாருக்கு அனுப்பவேண்டுமென்றேற்படுத்திய சட்டத்தையும் உங்களுக்கு ஞாபகப்படுத்த ஆசிக்கிறோம்.

ஆனால், சங்கைக்குரிய சகோதரரே, நமது விருப்பங்கள் எல்லாம் அனுகூலமாய் நிறைவேறும்பொருட்டு, நீங்கள் உங்கள் குருமார்களை பயிற்றுவிப்பது மிஷன்களின் கருத்துக்கிணங்கினவிதமா யிருக்கக்கடவது அத்தியாவசியம். சாதாரணமாய் விசுவாசிகள் அப்போஸ்தோலிக்கு போதகர்களை ஆதரிக்க மனப்பூர்வமாய் ஆசிக்கிறார்கள்; ஆனால் நீங்கள் இந்த அவர்களது ஆசை வியர்த்தமாகாதபடி அதை யுக்தி விமரிசையுடன் மிஷன்களின் நன்மைக்காக உபயோகித்துக் கொள்ளவேண்டியது. உலகிலுள்ள சகல கத்தோலிக்கு மேற்றிராசனங்களிலும் மிஷன் குருக்களின் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அவை விசுவாசப் பரம்புதல் சபையாரின் அதிகாரத்தில் நடைபெற்றுவரவேண்டுமென்பது எமது விருப்பமென்று தெரிந்துகொள்வீர்களாக; அச்சபையாருக்கு இவ்விஷயத்தில் வேண்டிய அதிகாரத்தை நாம் ஏற்கெனவே கொடுத்திருக்கிறோம். இந்த சங்கங்கள் கொஞ்ச காலத்துக்குமுன் இத்தாலியாவில் ஸ்தாபிக்கப்பட்டு, மற்ற நாடுகளிலும் பரவிவருகின்றன; அவை நம்முடைய ஆதரவில் தெழித்தோங்கி வளர்ந்துவருவதுமல்லாமல் எம்மால் அவைகளுக்கு அநேக ஞானப்பலன்களும் அருளப்பட்டிருக்கின்றன. நல்ல காரணங்களைக் கொண்டுதான் இவ்வாறு செய்ய நாம் தூண்டுகிறோம். ஏனெனில் விசுவாசிகளை ஆத்துமங்கள் மட்டில் ஆவல்கொள்ளும்படி உற்சாகப்படுத்தவும், மிஷன்களின் நன்மைக்காக அப்போஸ்தோலிக்கு ஆதீனத்தின் ஆதரவிலிருக்கும் பல ஸ்தாபகங்களை நடத்த தங்கள் முயற்சியனைத்தையும் செலுத்தவும், குருக்களிடத்தில் பக்தி வைராக்கியத்தை அத்தகைய சங்கங்கள் வெகு நேர்த்தியாய் ஏவிவருகின்றன.

சங்கைக்குரிய சகோதரரே, உலகமெங்கும் கத்தோலிக்கு வேதத்தைப் பரவச்செய்யும் விஷயமாய் நாம் உங்களுக்கெழுதவேண்டுமென்று எம்முள்ளத்தில் பட்டது இதுவேயாம். வெளியிலுழைக்கும் போதக குருக்களும், உள்ளூரிலுள்ள விசுவாசிகளுமாகிய யாவரும் தாங்கள் செய்யக் கடமைப்பட்டுள்ள காரியங்களைச் சரிவரச் செய்தால், சண்டையினால் சீரழிந்து நாசமான மிஷன்கள் மறுபடியும் நன்றாய்ச் செழித்தோங்கும் என்று நம்ப இடமுண்டு. “ஆழமான கடலில் படகைத் தள்ளு” (லூக். V. 4) என்று இராயப்பரை ஏவிய ஆண்டவரின் குரலோசை நம்மையும் இப்போது ஏவுகிறது; எம்மிடத்தில் பற்றி எரியும் பிதாவுக்குரிய நேசம் கணக்கற்ற மனிதரை ஆண்டவரின் அரவணைப்புக்குள் கொண்டுவந்துசேர்க்க நம்மை உடன்படுத்துகிறது. இஸ்பிரீத்துசாந்துவினால் திருச்சபை எப்போதும் போஷிக்கப்பட்டு, ஸ்திரப்பட்டிருக்கிறது; அதன் அபிவிருத்திக்காக உழைத்தவர்களும் உழைத்துவருவோருமாகிய அப்போஸ்தலத்துவ மனிதர்களுடைய பிரயாசையனைத்தும் பலனளியாமல் போகாது. அவர்கள் நன்மாதிரிகையால் தூண்டப்படும் அநேகர் முன்வந்து, விசுவாசிகளுடைய ஜெபம், தானம் இவற்றினுதவியால் அநேக ஆத்துமங்களை கிறீஸ்துநாதரிடங் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அப்போஸ்தலருக்கு இராக்கினியாகிய தேவதாயார் இஸ்பிரீத்துசாந்துவின் அநுக்கிரகத்தை வேதபோதகருக்குப் பெற்றுதவி, நம்மெல்லோருக்கும் பொதுவாயிருக்கும் இவ்விருப்பங்களை ஆசீர்வதிப்பாளாக. இஸ்பிரீத்துசாந்துவின் ஆதரவில் நமது நேசத்தினடையாளமாக சங்கைக்குரிய சகோதரரே, உங்களுக்கும், உங்கள் குருக்களுக்கும், உங்கள் ஜனங்களுக்கும் அப்போஸ்தோலிக்கு ஆசீர்வாதத்தை பிரியமா யளிக்கின்றோம்.

உரோமாபுரியில் அர்ச். இராயப்பர் கோவிலில், நாம் பாப்பு ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்ட ஆறுமாண்டாகிய 1919ஆ நவம்பர்மீ 30-ந் தேதி கொடுக்கப்பட்டது.

15-ம் ஆசீர்வாதப்பர்.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XII
சேதேயோனின் துல்லிய கம்பளம்.

“கம்பளத்திற் பெய்யும் மழைபோலவும், துளித்துளியாய்த் தரையில் விழுந் தண்ணீரைப் போலவும் அவர் இறங்குவார்” (சங். 71, 5).

இஸ்ராயேலர் கர்த்தருக்குத் துரோகஞ் செய்தார்கள். அதுகாரணம்பற்றி தண்டிக்குமாறு அவர்களை மதியானித்தர் கையில் விட்டுவிட்டார். அவர்களால் வெகு துன்பமடைந்தனர். பலவித இம்சைக்குள்ளாயினர். பலவித கஷ்டங்களநுபவிக்க நேர்ந்தது. ஒரே வார்த்தையில் மதியானித்தர்க்கு முன்பாக இஸ்ராயேலர் மிகவுந் தாழ்த்தப்பட்டார்கள். கஸ்திக்குள்ளானகாலையில் அவர்கள் கடவுள்முகந் திரும்பி, அவரது ஒத்தாசையைக் கேட்டு மன்றாடினார்கள். அவரோவெனில் அவர்களிடம் தீர்க்கதரிசியான ஓர் புருஷனை யனுப்பினார். அவர்தான் சேதேயோன். அவர் செய்யவேண்டியதென்னவென்பதைக் குறித்து ஆண்டவருடைய சம்மனசானவரேவந்து அவருக்குத் தெரிவித்தார். இஸ்ராயேலரின் சத்துருக்களாகிய மதியானித்தர் தம்மோடு அமாலேசித்தரையுங் கீழ்த்திசையார் யாவரையும் ஒன்றுகூட்டிக்கொண்டு யோர்தான் நதியைக் கடந்து ஜெஸ்ரூயேல் கணவாயில் பாளையமிறங்கினார்கள். இதைக்கண்ட சேதேயோன் ஆண்டவரால் ஏவப்பட்டு, எக்காளத்தையூதி இஸ்ராயேலர் எல்லோரையும் ஒருங்கே யழைத்தான். அப்போது சேதேயோன் ஆண்டவரை நோக்கி:—“நீர் சொன்னபிரகாரம் என்னைக்கொண்டு இஸ்ராயேலரை மீட்பீரோயானால் நான் இந்த ஆட்டு மயிர்க் கம்பளத்தைக் களத்திற் போடுகிறேன். பனி கம்பளத்தில்மாத்திரமே பெய்து, பூமியெங்கும் ஈரமில்லாதிருக்குமானால் நீர் சொல்லியபடி இஸ்ராயேலரை என் கையால் மீட்பீரென்றறிவேன்” என்றான். அதேபிரகாரம் நடந்தது. அவன் இரவில் எழுந்திருந்து மயிரைப் பிழிந்து ஒரு பாத்திரம் நிரையப் பனிநீரால் நிரப்பினான். மறுபடியும் சேதேயோன் சர்வேசுரனை நோக்கி:—“கம்பளத்தைக்கொண்டு இன்னுமொரு அடையாளங் கேட்கத் துணிவேனேயானால், ஆண்டவரே நீர் என்மேல் கோபங்கொள்ளாதேயும். கம்பளமாத்திரங் காய்ந்திருக்கவும், பூமியெங்கும் பனியினால் நனைந்திருக்கவும் மன்றாடுகிறேன்” என்றான். அன்றிரவில் அவன் கேட்டுக்கொண்டபிரகாரமே சர்வேசுரன் செய்தார். கம்பளங் காய்ந்திருக்கத் தரையில்மாத்திரம் பனி விழுந்திருந்தது.

சேதேயோனின் கம்பளமும் அதனையொட்டி நடந்த அற்புதங்களும் கன்னிமரியாயையும் அவள்பால் கடவுள் செய்துள்ள அருட்புதுமைகளையும் நன்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

1. மயிர்க் கம்பளமானது கன்னிமைக்கு ஒப்பனையென்று அர்ச். இல்தெபோன்ஸ் குறிப்பிடுகிறார். அவர் சொல்வது: “கம்பளத்தின் மயிரானது சரீரத்திலுள்ளது. ஆயினும் சரீரத்திலுள்ள ஆசாபாசங்கட்குச் சம்பந்தப்படாதது. அதுபோலவே, கன்னிமைத்தனமானதுஞ் சரீரத்தின்பொருட்டுள்ளதே. ஆயினும் சரீரத்தில் தோன்றும் துர் இச்சைகளை ஒறுத்து நிற்பது” என்பதாம். இவ்வதியுன்னத புண்ணியமானது வரைகடந்தவிதமாய் மரியாயினிடந் துலங்கியது. ஆகவே, ‘கன்னியர்களுக்கெல்லாங் கன்னிகை’ என்றும் ‘மிக்கப் பரிசுத்த கன்னிகை’ யென்றும்—திருச்சபை மரியாயை அழைக்கின்றது. சரீரத்தோடிருந்தும் சரீரமில்லாததுபோற் சீவிப்பது உலக சீவியமல்ல—அது பரலோக சீவியமாம். சரீரத்தோடிருக்கும்போதே சம்மனசுக்குரிய இப்புண்ணியத்தை யடைவது அசரீரிகளாய் இருப்பதைவிட அதிகப் பலனுள்ளதும் மேன்மையுற்றதுமாம். சம்மனசுக்களாயிருப்பது பாக்கியமே. ஆனால் கற்பெனும் புண்ணியத்தை யநுசரித்துக் கன்னிகையாயிருப்பது அதைவிட மேலான பாக்கியமாம். ஏனெனில் இப்புண்ணியமானது சம்மனசுக்களுக்கு இயற்கையிலேயே கொடுக்கப்பட்டது. ஆனால் ஓர் கன்னிகை அதைத் தன் சொந்த பலத்தால் கடவுள் கிருபையைக்கொண்டு அடைகின்றாள். சம்மனசுக்கள்பேரிலும், கன்னிகையின்மீதுங் கட

வுளின் கருணை அபரிமிதமாய்ப் பொழியப்பட்டுளது. மரியாயினிடத்தில்—அவளுடைய பரிசுத்தத்தனம் தேவதூதர்களுடையதைவிட மேலாக இருந்ததால் — எவ்வளவு அருள்பொழிந்திருப்பார் என்று எவர் கூறக்கூடும்! "யூதாவின் கோத்திரத்தினின்று மற்ற மனிதர்களைப்போலவே மரியாய் சரீரத்தோடு பிறந்தனள். ஆயினும் சரீர வாஞ்சைக்கிணங்கி நடக்கவேயில்லை. ஆசாபாசத்தை அறவே துறந்திருந்தனள். அசரீரியைப்போல் ஒழுகினள். ஓர் கம்பளமானது பிறர் என்செயினுஞ் சும்மாயிருப்பதுபோல, துன்பதுரிதம் வந்தபோதும் பொறுமை சாதித்து மௌனமாயிருந்தனள் மரியாயி" எனப் பிரேக்தேசத்து எர்னெஸ்ட் என்பவர் பகர்கின்றார்.

2. கம்பளத்தின்மீது பனி வீழ்ந்ததுபோல் மரியாயினுதரத்தில் சேசு தேவன் வந்திறங்கினார். வார்த்தையானது மரியாயினிடம் மாம்சமானதும் வானலோக பனிபோன்ற தேவத்துவம் ஆங்கு யிறங்கி வாசமாயினது. ஆகவே, அமிர்தநாதர், எபிரேம், சோபரினியுஸ், புரோக்எஸ் முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள் கன்னிமரியாயை 'சேதெயோனின் கம்பள'மென அழைக்கின்றனர். "மரியாய் கர்த்தரை கருப்பத்தரித்தபோது தனது கற்பைப் பங்கப்படுத்தாது அவரைத் தன்னுள் முற்றுமே ஏற்றுக்கொண்டாள். தனது முதிர்ந்த பக்தியால் இவ்வுன்னத அருளுக்கிணையானாள்" என அர்ச். அமிர்தநாதர் செப்புகின்றார். "இடையர்கள் இரவில் தத்தம் மந்தைகளைக் காத்துக்கொண்டிருக்கையில் 'கடவுளுக்கு அதி யுன்னத ஸ்தோத்திரம்—உலகில் நல்மனதுள்ளோருக்குச் சமாதான முண்டாவதாக' எனுங் கீதத்தைக் கேட்டார்கள். சற்றே பின், காய்ந்துலர்ந்த இந்த உலகத்தில் மாசற்ற தூய கம்பளத்தின்மீது தேவ செம்மறிப்புருவையைக் காணப் பாக்கியம்பெற்றனர்" என்பது அர்ச். எரோணிமூசின் மொழிகள். "சேதெயோனின் கம்பளத்தின்பால் நடந்த காட்சியின் பொருளென்ன? அர்ச். மரியாய் கன்னிமையை யிழந்துபோகச்செய்யாது அவளிடம் நமது இரட்சகர் மனுஷாவதாரமெடுத்ததே இதன் பொருளாகும். அக்கன்னிகையினிடத்திருந்து, வாடிவதங்கிய நமக்கு நல்லருள் பொழியுமாறு வானுலக பனிபோல் தேவ சுதன் மரியாயினிடத்து இறங்கினார்" என அர்ச். பெர்நார்து சொல்லுகிறார். "எங்கள் தேவனாகிய கர்த்தாவே! மானிடசந்ததியை இரட்சிக்க கம்பளத்தில் பனி வீழ்ந்ததுபோல் வந்திறங்கினீர்" என்று வேதாகமங்கள் கூறுகின்றன. "தேவரீர் ஓர் கன்னிகையினிடமிருந்து அற்புதமாய்ப் பிறந்தபோது நிறைவேறிற்றே" எனத் திருச்சபை பாடுகின்றது. "கம்பளத்திற் பெய்யும் மழையைப்போலவும்; துளித்துளியாய் தரையில் விழும் தண்ணீரைப்போலவும் அவர் இறங்குவார்" எனும் இவ்வசனத்தை வியாக்கியானஞ்செய்கையில் அர்ச். கிறிசொலோகஸ் இராயப்பர் சொல்கிறதாவது:—"வானுலோகத்திலிருந்து மரியாயெனுங் கம்பளத்தில் தேவ அருள்வாரி மெதுவாய்ப் பெய்தது. தேவத்துவப் பனி மனுஷீக தன்மையின் கம்பளத்தில் மறைந்திருந்தது. சிலுவையினாலை யிலிட்டு நசுக்கப்படவே, உலகெங்கும் ஓடி இரட்சண்ணிய மழை பொழிந்தது" என்பதுவே.

3. சேதெயோன் கடவுளிடமிருந்து முதன்முதற் கேட்ட அடையாளம் கம்பளமட்டும் பனியால் நனைந்திருக்கவேண்டுமென்பதே. அப்படியே நடந்தது. அதனாலும் அதினிமித்தமாகவும் மரியாய் மெய்யாகவே பாக்கியவதியானாள். ஆகவே 'சகல ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளே' என சம்மனசானவர் அவளைப் போற்றி 'பிரியதத்தத்தினாலே பூரணமானவளே' எனப் புகழ்ந்தார். "அவள் தேவ அருளால் சம்பூரணமாய் நிறையப்பட்டவளென்பது சத்தியம். ஏனெனில் வரப்பிரசாதமானது மற்றவர்களுக்குப் பாகம் பாகமாய் அளிக்கப்பட்டது. ஆனால் மரியாய்க்கு முற்றுமே யீயப்பட்டது. ஆதலால் அவள் எல்லா பெண்மணிகளிலும் நன்மணியாக ஆசீர்வதிக்கப்பட்டாள்" என அர்ச். எரோனிமஸ் வர்ணிக்கின்றார்.

4. தரையானது பனியால் நனைந்திருக்கவேண்டுமென்று சேதெயோன் கடவுளை இரண்டாவது அடையாளமாகக் கேட்டான். அவ்வாறே சம்பவித்தது. சேசுநாதர் மரியாயினிடத்திலிருந்து பிறந்தமாத்திரத்தில் உலகம் முற்றும் தேவ பனி பரவினது. "மரியாயின் கம்பளத்தின்வழியாகவே தம்மக்கள் தேவ அருள் பெறுவதாக" திருச்சபை புகட்டுகின்றது. கம்பளத்தின்மீது மழைபோல் அவர் வந்திறங்கினார். அம்மழைதான் தேவ அருளும் ஞானப்பலன்களுமாம். அவைகளினுதவியால் வரண்டுகிடக்கும்

ஆத்தும புலன்கள் இரட்சண்ணிய வாமும் நித்தியானந்த கனியுமடைய லாயக்காகின்றன.

5. தமது சத்துராதிகளுக் கெதிரியாய்ப் படையெடுத்துச் செல்லுமுன் சேதெயோன் கடவுளிடமிருந்து இந்த அடையாளங்களைக் கேட்டான். நாம் உலகிலிருக்கின்றோம். நமது சீவியம் ஓர் போர்க்களம். நமக்குச் சத்துராதிகளிருக்கின்றனர். வெற்றிபெறவேண்டுமாயின் நாம் சண்டைபோடவேண்டும். அதற்குமுன் நாமும் ஓர் அடையாளம் கேட்போம். அர்ச். மரியாயின் சலுகையை நாடுவோம். அத்தாயினடைக்கலம்புகுந்தால் அச்சமில்லை. அத்தாயினுதவியிருந்தால் ஐயமற ஜெயம்பெறுவோம். தேவதாயாரின்மட்டில் நாம் வைக்கும் பக்தியானது உண்மையானதும் உதாரமானதுமானால் நமக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. அப்பக்தியே நமக்கு வரவிருக்கிற மோக்ஷவானந்தத்திற்கு அச்சாரமாம்.

(இன்னும் வரும்.)

M. S. M.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

3-ம் அதிகாரம்; வசனம்—19-22.

(முன் தொடர்ச்சி.)

அருளப்பர் போதித்த விஷயங்களின் சாராம்சம் முன் வியாக்கியானஞ் செய்த 7-17-ம் வசனங்களில் அடங்கியிருக்கிறது. அவர் மனுஷர் முகத்தாக்ஷண்ணியத்தைப் பாராமல் மனத்திடாரிக்கத்துடன் சொல்லிவந்த புத்திமதிகளில் எரோது அந்திபாஸ் செய்த அக்கிரம நடத்தையைக் குறிப்பிட்டுக் கண்டனஞ்செய்தது ஒன்றாகும்.

19-20-ம் வசனம்.—இந்த எரோதன் அரேத்தே ராஜாவின் புத்திரியை மணம்புரிந்து அவளுடன் சிலகாலம் வாழ்ந்தபின் அவளை நீக்கிவிட்டு, தன் சகோதரன் பிலிப்புவின் மனைவி எரோதியாளை கணவன் உயிருடனிருக்கும்போதே பகிரங்கமாயும் சங்கோசமில்லாமலும் தன் வைப்பாட்டியாக வைத்துக்கொண்டு ஊர் ஜனங்களுக்குப் பெரும் துர்மாதிரிகைக்காட்டிவந்தான். எரோதியாள் என்பவள் பிலிப்பு, எரோது அந்திபாஸ் என்பவர்களுடைய சகோதரனாகிய அரிஸ்தோபுலுஸ் என்பவனுடைய குமாரத்தி. ஆகவே பாதாரமென்றும் பாராமல் நெருங்கின உறவினராகிய எரோதியாளை எரோது அந்திபாஸ் தன் கைவசமாக்கி அவளுடன் மணமுடித்ததானது அகம்மியாகமனமும் விபாசாரமுமாகிய சுபாவத்துக்கடாத மகா பெரிய பாதகமானதினால், இத்துஷ்டாட்டத்தையும், இன்னும் அவன் செய்துவந்த வேறு பல அக்கிரமங்களையும் பொறுக்கமாட்டாமல், ஸ்நாபக அருளப்பர் அவனைக் கடிந்துகொண்டார். எரோதோவெனில் அருளப்பர் தருமிஷ்டரென்றும் தீர்க்கதரிசியென்றும் அறிந்து, அவர் சொன்ன அநேக விசேஷங்களைக் கேட்டு நடந்தான். ஆனால் தனக்கதிக நேசமான ஸ்திரீயைவிட்டுப் பிரிய அவனுக்கு விருப்பமில்லாமல், அவர்பேரில் வர்மம்கொண்டு அவரைக் கொல்ல நினைத்தான். சகல ஜனங்களும் அவரைத் தீர்க்கதரிசியாக வெண்ணி சங்கித்துவந்ததினால், அவர்களுடைய குழப்பத்துக்குப் பயந்து பின்வாங்கினான். எரோதனைப்பார்க்கிலும், எரோதியாள் பொல்லாப்பில் மிஞ்சினவளாய்த் தன் மனதில் அதிக குரோதத்தை யுட்கொண்டு அவரைக் கொல்லுகிறதற்குச் சமயம்பார்த்திருந்தாள். இப்படியே இருவரும் ஸ்நாபக அருளப்பர்பேரில் குரோத வைராக்கியங்கொண்டு அவரைக் கொல்ல நினைத்து அதனை நிறைவேற்றமுடியாமற் சிறைச்சாலையில் வைக்க மனந்துணிந்தார்கள். எரோதனுடைய நடத்தை அக்கிரமங்கள் நிறைந்த நடத்தையென்று காண்பிக்கிறதற்காக லூக்காஸ் அவனைக் குறிப்பிடும்போது "அவன் செய்திருந்த சகல பொல்லாங்குகளைப்பற்றியும் அருளப்பரால் கண்டிக்கப்பட்டான்" என்று எழுதினார். நமது திவ்ய கர்த்தரும் அவனுக்கு நரியென்று பெயரிட்டு சூதும் கபடும் நிறைந்த அவனுடைய துஷ்டத்தனத்தை வெளியிட்டார். (லூக். 13-ம் அதிகாரம் 32-ம் வசனம்.)

21-22-ம் வசனம்.—ஸ்நாபக அருளப்பர் ஜலத்தினால், நற்கருத்துடைத்தான ஜனங்களை ஸ்நாபித்து கிறீஸ்துநாதரை விசுவசிக்

கப் படிப்பித்துவரும்போது அவரிடம், வருகிற அனேகாயிரம் பாவிகளுக்குள்ளே, அவர்களில் ஒருவராக கிறீஸ்துநாதரும் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத் ஊரிலிருந்து ஸ்நானம் பெற வந்தார். அருளப்பர் தனது தாயுதரத்திலிருக்கும்போது அவரை யறிந்திருந்தாலும் இருவரும் பிறந்ததின்பின் ஒருவரொருவரை முகமுகமாய்க் கண்டதில்லை.

ஆனால் இத்தனை ஜனங்களுக்குள்ளே அவர் வந்தாலும் இஸ்பிரீத்துசாந்துவினருளடைந்து, உடனே அவரை யறிந்து, அவருடைய திருச் சிரசில் கையுயர்த்த மனந் துணியாமல் அவரைப் பார்த்து தன்னை தூசியிலும் அற்பமாய்த் தாழ்த்திக்கொண்டு நானும்மால் ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க தேவரீர் அடியேனிடத்திலதைப் பெறவருகிறீரோவென்று கேட்டார். அதற்குக் கிறீஸ்துநாதர் சகல தாழ்ச்சியின்மாதிரிகையை உலோகத்திற் காண்பிக்க தாம் வந்ததினால் பிரதிவாதித்து சகல தர்ம நெறியை நாம் நிறைவேற்றவேண்டியது, இத்தருவாயில் நம்மைப் பெற விடென்று வசனித்தவிடத்தில் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப் படிந்து அவரை ஸ்நாபித்தார்.

அப்போது கிறீஸ்துநாதர் ஆற்றில் நின்றெழும்பிக் கரைக்குவந்து பிதாவாகிய சர்வேசுரனைப் பிரார்த்தித்திருக்க, இதோ! மோக்ஷ மண்டலம் திறக்கப்பட்டு இஸ்பிரீத்துசாந்துவானவர் மாடப் புறாவின் ரூபமாய் அவர்பேரிலிறங்கினதையும், பிதாவாகிய சர்வேசுரன் பரமண்டலத்தினின்று "அவர்தாம் நமதன்பான குமாரன், அவர்பேரில் முழுப் பிரியங் கொண்டோம்" என்று வசனித்ததையும் சமஸ்தரும் கேட்டார்கள்.

கிறீஸ்துநாதர் தமது ஊழியனாகிய அருளப்பரிடம்வந்து பாவிகளின் கூட்டத்தில் தாமும் நின்று பாவிகளுக்காக எற்படுத்தப்பட்ட தப ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டது அவருடைய அத்தியந்த தாழ்ச்சியை விளக்குகிறது. ஞானஸ்நானம் பெற்றதும் நமதாண்டவர் தமது திவ்ய பிதாவை நோக்கி ஜெபிக்கிறார். இச்செபத்தைப்பற்றி லூக்காஸ் ஒருவரே எழுதியிருக்கிறார். இச்செபத்தினால் கிறீஸ்துநாதர் தாம் தமது தேவ பிதாவுக்குத் தாழ்ந்தவரென்று வெளிப்படுத்துகிறார். இச்செபத்தில் கிறீஸ்துநாதர் தாம் இப்போது ஆரம்பிக்கப்போகிற பகிரங்க சீவியத்தின் வேலைகளையும், தம்முடையவர்களையும், திருச்சபையையும் தமது தேவ பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லலாம். கிறீஸ்துநாதர் தமது ஞானஸ்நானத்தால் தாம் மனிதர் செய்த பாவங்களுக்கு உத்தரித்துப் பரிகாரஞ்செய்யும்படி பாவிகளின் பிணையாய் எற்பட்டதாகவும், அவர்களுடையபாவாக்கிரமங்களின்பெருஞ் சுமையை தமதுபேரில் சுமந்துகொள்ள தம்மை தேவ பிதாவுக்குக் கையளித்துவிட்டதாகவும் அறிக்கையிடுகிறார். அன்றியும் ஜலத்தில் தம்மை முழுக்காட்டினதினால், பாவங்களுக்குப் பரிகாரமாகத் தாம் மரித்து அடக்கஞ்செய்யப்பட விரும்புவதையும் நமக்குப் படிப்பிக்கிறார்.

கிறீஸ்துநாதரிடம் அற்ப தோஷமுமில்லாதிருக்க பாவிகளுள் ஒருவனைப்போல் ஞானஸ்நானம் பெற காரணமேதெனில்:— முதலாவது, சகல தருமங்களுக்குந் தாழ்ச்சி அஸ்திவாரமானதினால் அதின் மாதிரிகையைத் தம்மிடத்தில் காண்பிக்கச் சித்தமானார்; 2-வது, தமது ஞானஸ்நானத்தைப் பெற உயர்குலத்தோரும், செல்வமும் அதிகாரமும் படைத்தவர் சமஸ்தரும் வரவேண்டுமென்று படிப்பித்தார்; 3-வது அருளப்பருடைய ஞானஸ்நானம் தமது அருளினாலுண்டானதென்றும், தம்மால் கைக்கொள்ளப்பட்டதென்றும் அறிவித்தார்; 4-வது மனுஷருடைய பாவங்களைக் கழுவத் தமது சரீரஸ்பரிசத்தினால் யோர்தானாற்றின் ஜல முதலான சகல தண்ணீர்களுக்கும் அவுஷதமும் சக்தியும் கொடுக்கத் திருவுளமானார் என்று வேத சாஸ்திரிகளாகிய அர்ச். அம்புரோஸ், இரோனிமுஸ், பேதா, தோமாஸ் என்பவர்கள் வசனிக்கிறார்கள். சேசுநாதர், தமது ஜனனநாளிலும், தேவாலயத்தில் காணிக்கை கொடுத்த நாளிலும், தம்மைத் தாழ்த்தினபோது எவ்விதம் மகிமைப்படுத்தப்பட்டாரோ, அவ்வாறே இப்போதும் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்று தம்மைத் தாழ்த்துகையில், தேவ பிதா அவரை மகிமை பெருமையால் சிறப்பித்துயர்த்துகிறார்.

ஆண்டவர் ஞானஸ்நானம் பெற்று செபம் செய்யும் தருணத்தில் திடீரென ஆகாயத்தில் ஓர் அற்புதமான பிரகாசம் ஜொலித்து துலங்க வான மண்டலமே திறக்கப்பட்டதை எல்லோரும் கண்டு அதிசயித்து கலங்கினர்

கள். திறக்கப்பட்ட வானுலகிலிருந்து இஸ்பிரீத்துசாந்து மாடப் புறுவின்ரூபமாய் ஆண்டவர்மீது வந்திறங்கினதுமல்லாமல் ஓர் ஆச்சரியமான சப்தம் "நீரே நமது நேச குமாரன், உமதுபேரில் பிரியமாயிருக்கிறோம்" என்று சப்தித்தது. இவ்வதிசயங்களையெல்லாம் அங்கு கூடியிருந்த சமஸ்தரும் கண்ணுற்று மிகவும் கலங்கி பிரமித்து ஸ்தம்பித்துப்போயிருக்கவேண்டுமல்லவோ? சேசுநாதர் தம்மைத் தாழ்த்திக்கொண்டதற்கு, அக்ஷணமே சர்வேசுரன் அவரை எம்மாத்திரம் அற்புதமான மகிமை பெருமைகளால் சிற்ப்பிக்கிறார் என்று இவ்வர்த்தமானம் நமக்குக் கண்கூடாய் விளக்குகிறது!

இஸ்பிரீத்துசாந்து கிறீஸ்துநாதரின்பேரில் இறங்கிவந்தார் என்றதால் அவர் இப்போதுதான் இஸ்பிரீத்துசாந்துவின் அருட்கொடைகளைப் பெற்றுக்கொண்டார் என்றாவது, அல்லது இஷ்டப்பிரசாதத்தில் விர்த்தியடைந்தார் என்றாவது சிந்திப்பது தவறாம். ஆனால் அவர் உற்பவமான முதல் க்ஷணத்திலேயே இஷ்டப்பிரசாதங்களின் சம்பூரணம் பெற்றிருந்ததினால், அச்சம்பூரணத்தை இப்போது இஸ்பிரீத்துசாந்துவின் வருகையின் வெளியரங்க தோற்றம் வெளிப்படுத்துகின்றது.

சேசுநாதர் தம்மைப் பாவிகளின் பிணையாய்த் தமது திவ்ய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தபோது, அக்காணிக்கை பிரியமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவிப்பதற்காக, சேசுநாதரிடத்தில் அடங்கியுள்ள உன்னதங்களும் உச்சிதமான சிறப்பு இலட்சணங்களும், அவருடைய முயற்சியால் பூலோகத்துக்கு வரப்போகிற நன்மைகளும், அற்புதமான வெளியரங்க அடையாளங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன.

சேசுநாதரிடம் தேவத்துவத்தின் சம்பூரணம், சரீரப்பிரகாரமாய்க் குடிகொண்டிருக்கிறதையும் (கொலோ. 2-ம் அதிகாரம் 9-ம் வசனம.) இஸ்பிரீத்துசாந்துவின் அருட்கொடைகள் அவரிடம் ஓர் அற்ப குறைவில்லாமல் பரிபூரணமாயிருப்பதையும் மாடப் புறுவின்ரூபமாய்த் தோன்றின இஸ்பிரீத்துசாந்துவின் வருகை வெளிப்படுத்துகின்றது.

ஆதாமின் கீழ்ப்படியாமையாலும் ஆங்காரத்தாலும் தாளிடப்பட்ட மோக்ஷவாசல், கிறீஸ்துநாதரின் கீழ்ப்படிதலாலும், தாழ்ச்சியாலும் திறக்கப்பட்டதென்று காண்பிக்கிறதற்காக வானமண்டலம் திறக்கப்பட்டது.

"நீரே நமது நேச குமாரன் உமதுபேரில் பிரியமாயிருக்கிறோம்" என்ற வசனம் தேவபிதா தமது ஏக சுதனாகிய சேசுக்கிறீஸ்துவை நோக்கி கூப்பிட்ட வசனம்.

Filius dilectus (நமது நேச குமாரன்) என்ற பதங்களுக்காக *Unicus, unigenitus* (ஏக சுதன்) என்றும் வேதாகம புஸ்தகத்தில் பல விடங்களில் சொல்வதுண்டு (ஆதியாக. 22-ம் அதிகாரம் 2, 12, 16-ம் வசனம்). ஆகவே சேசுநாதர் மற்ற மனிதர்களைப்போல் சர்வேசுரனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதுபோலல்லாமல் சர்வேசுரனுடைய மெய்யான ஏக சுதனென்றும், அவருக்குச் சரிசமானமானவர் என்றும், அவரே தேவனென்றும் சொல்வதற்கு 22-ம் வசனம் சான்று.

சர்வேசுரன் தமது நேச குமாரன் சேசுநாதர் பேரில் பூரண பிரியமாயிருக்கிறார். ஆகவே, அவரை ஒத்திருப்பவர்களையும், அவருடைய சாயலைத் தரித்திருப்பவர்களையும் அவர் நேசிக்கிறார் என்பது நிச்சயம். ஆகவே கிறீஸ்துநாதரிலும், அவர் மூலமாயும்மாத்திரம் சர்வேசுரனுக்குப் பிரியப்படலாமொழிய மற்றெவ்விதத்திலும், அவருக் குகந்தவர்களாகமுடியாது. அவரால்மாத்திரம் சர்வேசுரனுடைய கோபம் தணிகின்றது. பாவத்தால் விரோதிக்கப்பட்ட பூலோகம் அவருடன் ஒப்புரவாக்கப்படுகின்றது.

கிறீஸ்துநாதருடைய பகிரங்க சீவியம் அவர் ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து ஆரம்பமாகிறபடியால், அவ்வாரம்பம் இத்தனை அற்புத தேவ இரகசியங்களால் சிறப்பிக்கப்படுகின்றது. இத்தருணத்தில்தான் நமதாண்டவர் ஞானஸ்நானம் என்கிற தேவத்திரவிய அனுமானத்தை ஏற்படுத்தினார் என்பது வேதபாரகருடைய அபிப்பிராயம்.

நாம் திருச்சபையில் பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானத்திலும் சேசுநாதருடைய ஞானஸ்நானத்தில் நிகழ்ந்த விசேஷங்கள் நிகழ்கின்றன. ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு மோக்ஷம் திறக்கப்படுகிறது. அதாவது அவர்கள் மோக்ஷத்தையடைய சுதந்தரம் பெறுகிறார்கள்! இஸ்பிரீத்துசாந்து

மது கொடைகளுடன் அவர்கள் ஆத்துமத்தில் எழுந்தருளிவருகிறார். அவர்கள் சர்வேசுரனுடைய சுவிகாரப் பிள்ளைகளாகிறார்கள்.

கிறீஸ்துநாதரின் ஞானஸ்நானத்தில் தேவ திரீத்துவத்தின் இரகசியம் பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கப்படுகிறது. அதெவ்விதமோவெனில் சுதன் ஞானஸ்நானம்பெறுகிறார்—இஸ்பிரீத்துசாந்து புறாவின் ரூபமாயிறங்கினார். பிதா தமது சத்தத்தால் தம்மை அறியச்செய்தார்.

(தொடரும்.)

S. M.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

ஜெபமாலையின் ஓர் அற்புதம்.

நான் என் வியாதியினிமித்தம் திருச்சினாப்பள்ளி முனிசிபல் ஆஸ்பத்திரியில் உள்வியாதியஸ்தனாகவிருந்து வைத்தியம் பார்த்துக்கொள்ளப் போயிருந்தேன். அவ்விடத்தில் எனக்குக் காலையிலும் மாலையிலும் ஜெபமாலை தவறாமல் சொல்வதுதான் பெரிய ஆறுதலாயிருந்தது.

இப்படியிருக்கையில், ஒரு நாள் காலையில் நான் இருந்த அறைக்கு ஓர் புதிய வியாதிக்காரப் பையனைக் கொண்டுவந்தார்கள். அந்த பையன் கடுங்காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய தாயாரும் தமயனாரும் கூடவந்திருந்தார்கள். அவனை அங்கே என் அருகாமையில் ஓர் கட்டிலிற் கிடத்தினார்கள். அவனைப் படுக்கவைத்தது துவக்கி அவன் வெருண்டு வெருண்டு எழுந்து பக்கத்திலிருந்தவர்களை அடிப்பதும், உதைப்பதும், தன் பல்லை நெரிப்பதுமாக இருந்தான். படுக்கையைவிட்டு அவன் எழுந்திராதபடி பார்த்துக்கொண்டிருக்க இரண்டு ஆட்கள் அருகாமையிலிருந்தார்கள். இப்படியாக அவன் சாயங்காலம் வரையிலுமிருந்தான். பிறகு இரவு ஆக ஆக அவன் அதிகமதிகமாய் வெருண்டு திடுக்கிட்டு எழுந்து ஓடுகிறதும் கத்துகிறதுமாக இருந்தான். இப்படியாக இரவு பத்து பதினொரு மணிவரையிலும் நடந்தது. பக்கத்திலிருந்தவர்களெல்லோரும் "இவன் எங்கேயோ பயந்திருக்கிறான். இவனுக்குப் பேய் பிடித்திருக்கிறது" என்று பலவாறு பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவையெல்லாம் நான் என் படுக்கையிலிருந்தே கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டுமிருந்தேன். இவனுடைய தொந்தரவினாலும் கூக்குரலினாலும் எனக்கும் மற்ற வியாதிக்காரருக்கும் தூக்கமேயில்லை. அவனுடைய புலம்பலையும், மிரண்டு மிரண்டு எழுந்திருப்பதையும் நான் பார்த்து சில சமயம் பேய்பிடித்திருக்கிறதென்று பிறர் சொல்லுவது உண்மையாக இருக்கலாமென்று நம்பி, சாதாரணமாய் ஜெபமாலையைக்கண்டால் பசாசு மிகவும் பயந்து ஓட்டம் பிடிக்குமென்று எனக்குத் தெரிந்திருந்தபடியால், நான் உடனே எழுந்து பரிசுத்த ஜெபமாலையை கையிலெடுத்து ஒருவருக்குந் தெரியாமல் உள்ளங்கையில் வைத்து மூடிக்கொண்டு மனதிலேயே சில மனவல்லயச் செபங்களை சொல்லிக்கொண்டு நேராய் அந்தப் பையனிடம் சென்றேன். நான் அவனண்டையில்போய் மற்றவர்களோடு நிற்கும்போது அந்த பையன், உடனே திடீரென்று வெருண்டு எழுந்து என்னைச் சுட்டிக்காட்டி, "இதோ இவன், கையில் ஓர் சுத்தியல் கொண்டுவந்திருக்கிறான்" என்று பயமான தோற்றத்தோடு சொன்னான். உடனே நான் ஜெபமாலையிருந்த என்னுடைய கையை மூடினபடியே அவனுக்குக் காட்டி, வேணுமென்றே, "இது என்ன?" என்று கேட்டேன். அவன் மறுபடியும், "சுத்தியல் வைத்திருக்கிறாய்" என்று நடுக்கத்துடன் சொன்னான். இப்படிச் சொல்லிக்கொண்டே படுக்கையைவிட்டுத் திடீரென்று எழுந்து ஓட ஆரம்பித்தான். உடனே ஜெபமாலையை அவனுக்குக் காட்டி "அடே! எழுந்திராதே, இச்சுத்தியால் உன்னை அடிப்பேன், படு! சுவாமியின்பேரால் இதை உனக்குச் சொல்லுகிறேன்" என்று சப்தமாய்ச் சொல்லவே, அவன் மிகவும் அமரிக்கையாய் படுத்துக்கொண்டான். இவ்விதம் இரண்டு மூன்று விசை நடந்தது.

பின்பக்கத்திலிருந்த சில அஞ்ஞான வியாதியஸ்தர்களும் சில துலுக்க வியாதியஸ்தர்களும்

இதைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு பிரமித்து நின்றூர்கள். பிறகு பக்கத்திலிருந்தவர்களை கொஞ்சம்அப்பால் போகச்சொல்லிவிட்டு நான் ஜெபமாலையைப் பத்தியோடு சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று அப்பையன் எழுந்து "என்னை விடு, என்னை விடு, நான் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து வெளியே வேகமாய்ப் போனுன். நான் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டே அவனேடு சென்றேன். இன்னும் இரண்டு பேர்வழிகள் எங்களைத் தொடர்ந்தார்கள். அவ்வறைக்குப் பக்கத்திலிருந்த ஓர் தோட்டத்துக்குள் அவன் கொஞ்சதூரம்போய், திரும்பவும் அவ்வறைபக்கமாய்வந்து அவ்விடத்தில் சட்டென உட்கார்ந்து "எனக்குத் தூக்கம் வருகிறது, நான் தூங்கப் போகிறேன்" என்று சொல்லவே, அவனைப் படுக்கைக்கு அழைத்துச சென்றேம். பிறகு ஒன்றும் பேசாமல் படுக்கையில் படுத்துக்கொண்டான். நான் அவன் பக்கத்திலிருந்துகொண்டு மற்றவர்களைத் தூங்கப் போகச்சொல்லிவிட்டு, நூற்றைம்பத்துமூன்று மணிச் செபம் பண்ணத் துவக்கினேன். இப்படியே இரண்டு விசை நூற்றைம்பத்துமூன்று மணிச் செபஞ்செய்து, தேவ தாயாருக்கு நன்றியறிந்த தோத்திரமாக ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கையில் அவனுக்கு நல்ல தூக்கம்பிடித்தது. இதைக் கண்டு நானும் தூங்கச்சென்றேன். அப்போது மணிக்கூண்டில் மணி மூன்று அடித்தது. அதுமுதற்கொண்டு அவன் விரண்டு விரண்டு எழுந்திருப்பதும், பக்கத்திலிருந்தவர்களை அடிப்பதும் காணேம்.

ஜெபமாலையைப்பற்றி பலர், விசேஷமாய் அர்ச். பாப்புமார்கள் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறூர்கள். அர்ச். பாப்பு ஊர்பான் என்பவர் ஜெபமாலையை "திருச்சபையின் விருத்திகரன்" என்றும், அர்ச். ஐந்தாம் பத்திநாதர் "வேதப் புரட்டின் மந்தாரத்தைத் தூரத்தும் வல்லபம்" என்றும், அர்ச். கிளமெண்ட் என்பவர் "விசுவாசிகளின் வல்லபமுள்ள காவல்" என்றும், அர்ச். பதிமூன்றும் கிரகோரியார் என்பவர் "கடவுளின் கோபத்தைத் தணிக்கும் வஸ்து" எனவும், "சமாதானத்தின் வான வில்" எனவும், அர்ச். ஐந்தாம் சின்னப்பர் "கிருபாகடாக்ஷத்தின் பொக்கிஷசாலை" என்றும் கூறி புகழ்ந்து பேசி, ஜெபமாலையைச் சொல்வோருக்கு ஏராளமான பலன்களையும் அளித்திருக்கிறூர்கள். ஜெபமாலைக் கிடப்பட்டிருக்கிற மேற்கூறிய நாமங்களோடு "சாத்தானை அடித்துத் தூரத்தும் பலமுள்ள சத்தியல்" என்று இந்த வர்த்தமானத்தில் சாத்தானலேயே கொடுக்கப்பட்டிருக்கும் புதுப் பெயரையும் ஜெபமாலைக்குச் சூட்டுவது நியாமன்றே?

M. P. சின்னப்பன்.

சென்னை.

சங். பத்திராதிபரே,

இதனடியிற்கண்ட விஷயத்தை தங்களுடைய அரிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாளது 1920ஆ எப்ரல்மீ 4உ ஆதிவாரம் நமது இரட்சகராகிய கர்த்தர் உயிர்த்த திருநாளன்று இராயபுரம் சன்மார்க்க சங்கத்தாரால் சேசுவின் திரு இருதயத்துக்குத் தோத்திரமாக சுமார் 1,700 எளியோர்க்கு உணவளிக்கப்பட்டது. இதுபோல் வருடா வருடமும் நடந்தேறுமாறு சேசுவின் திரு இருதயம் ஷை சங்கத்தை தன் அடைக்கலத்தில்வைத்துக் காத்துக காப்பாற்றி அதை ஆசீர்வதிப்பதாக. மேற்படி சங்கம் 1900ஆத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது. அதுமுதல் அதனல் சுமார் 200 பேருக்குக் குறையாமல் அன்னதானம் அளிக்கப்பட்டுவந்தது. பிறகு அது நாளடைவில் விருத்தியாகிவர, இவ்வருடத்தில் 1,700 பேருக்குக் குறையாமல் உணவளிக்கப்பட்டது.

இராயபுரம்,
6—4—20. } வி. ஆரோக்கியசாமி முதலியார்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

டென்மார்க்கு.—இத்தேசத்தார் சமீபத்தில் கலகஞ்செய்து, தமக்கு குடியாசு வேண்டுமென்று போராடுவதாகத் தெரிகிறது.

சிங்க இறைச்சி.—பாரிஸ் மிருகக் காட்சிசாலையில் யாதுகாரணத்தாலோ கொல்லப்பட்ட ஒரு பெண் சிங்கத்தின் இறைச்சியைக் கொண்டுவந்து பாரிஸ் மார்க்கட்டில் வைத்ததில், அது பவுன் நாலு ஷிலிங்கு

அதாவது மூன்று ரூபாய் விழுக்காடு விற்றுப் போய்விட்டதாம். சிங்க இறைச்சி மெத்த ருசிகரம்போலும்!

அரசர்பெருமான் ஜனனோற்சவம் வருகிற ஜூன்மீ 5-ந் தேதி கொண்டாடப் படும். அன்று பொது விடுமுறை நாளாகக் கருதப்படும். சமாதான உடன்படிக்கை இப்போது கையெழுத்தாய்விட்டபடியால், யுத்தத்திற்குமுன் நடந்ததுபோலவே, இந் தப் பெருநாளைச் சிறப்பாய்க் கொண்டாட வேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டி ருக்கிறது.

ஜலசந்தி பொதுவாகும்.—ஐரோப் பிய யுத்த சமாதான உடன்படிக்கையின் பற்பல நிபந்தனைகளைப்பற்றிய விவரங்களை நிர்ணயிக்க தற்போது கூடி யோசிக்கும் நேச தேசத்துக் கான்பரன்சில், ஜலசந்திகள் அனைத்தும் சகலருக்கும் பொதுவாக்கப்பட வேண்டுமென்று தீர்மானஞ்செய்திருக்கிற தாகத் தெரியவருகிறது. முன்னர் கடல் சுதந்திரமென்று சொல்லப்பட்டது இதுசம் பந்தமாய்த்தான்போலும்.

பிரமச்சாரிகளுக்கு வரி.—கடந்த ஐரோப்பிய யுத்தத்தில மற்றெல்லாரையும் விடப் பெருந்தொகையினராய் மாண்டவர் கள் பிரஞ்சுக்காரர்களேயாவர். அது காரண மாய்ப் பிரஞ்சு தேசத்தில் ஜனத்தொகை மிக்க குறைந்துகிடப்பதையறிந்த பிரஞ்சு அதிகாரிகள், அததேயத்தாரனைவரும், விவா கஞ்செய்துகொள்ளவேண்டுமென்ற நோக் கத்துடன் 25 வயதுக்குமேல் கலியாணமில் லாதிருக்கும் புருஷர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வருமானத்தின்மேல் நூற்றுக்கு 25 விழுக்காடு தலைவரி செலுத்தவேண்டுமென்று சட்டஞ் செய்திருக்கிறார்களாம்.

100 வயதுள்ள மாது.—தற்போது பெல்ஜியம்தேசத்துத் தலைநகரமாகிய பிரஸ் ஸல்ஸ் என்னும் நகரத்தில் ஓர் ஸ்திரீ வசித்து வருகிறாள். அவளுக்கு சமீபத்தில் நூறு வருட பூர்த்திவிழா கொண்டாடப்பட்டது. அவள் பார்வைக்கு 80 வயது மங்கையைப் போலிருக்கின்றாள். இன்னும் இப்போதுங் கூட தனக்குத்தானே பல வேலைகள் செய்து கொள்ளுகிறாள்; பல புத்தகங்கள் வாசிக்கின் றாள்; பின்னல் வேலை செய்கின்றாள்; அதிக சுறுசுறுப்புள்ளவளாயிருக்கின்றாள். அவள் பால்ய வயதில் ஒரு சர்க்கஸ் கம்பெனியில் குதிரைமேல் பலவிதமாக சவாரிசெய்து காட் டும் உத்தியோகத்திலிருந்தாள்.

மரியாயின் மகா சங்கம்.—அடுத்த டிசம்பர்மீ த்தில் சென்னையில் நடத்தப்ப டப்போகிற மரியாயின் மகா சங்க விஷய மாய் சென்றமீ மத்தியில், சென்னை அதி மேற்றிராணியார் சபாநாயகத்தில் நிர்வாக சபையார் கூட்டங்கூடி காரியங்களைப்பற்றி ஆலோசனை செய்தார்கள். பற்பல விஷயங் களையும் கவனித்து நடத்துவதற்காக மிக்க திறமைசாலிகள் சேர்ந்த ஆறு கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. இவர்களின் தற்கால செலவுக்கு இப்போது ரூபாய் 40,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்க விஷ யமாய் ஷை நிர்வாகக் கமிட்டியாருக்கு எழுத விரும்புவோர், சென்னை, அரமனைக்காரர் தெருவிலுள்ள மரியாயின் சங்க ஆபீசுக்கு எழுதல்வேண்டும்.

கண்ணோய்.—கண்களில் மேகநீர் சம் பந்தமாய் சதை வளர்ந்திருப்பதை எடுத்துக் கொள்வதற்கு கண் வைத்தியத்தில் நன் ருய்ப் பழக்கப்படாதவர்களிடம் சிகிச்சை செய்துகொள்வது மெத்தப் பிசகான காரிய மென்றும், அதில் விசேஷ தேர்ச்சிபெற்ற சென்னை கண் ஆஸ்பத்திரி ரண வைத்தியர்க ளிடமே சிகிச்சை செய்துகொள்ளவேண்டு மென்றும் வெளி ஜில்லாக்களிலுள்ள ஏழை கள், அந்தந்த ஜில்லா சர்ஜனிடமிருந்து சிபா ரிசின்மேல், கவர்ன்மெண்ட் செலவிலேயே சென்னைக்குவந்து சிகிச்சை செய்துகொள் ளலாமென்றும் கவர்ன்மெண்டு விளம்பரச் சபையார் ஒரு துண்டுப்பத்திரம் விடுத்தி ருக்கிறார்கள். இது ஏழைகளுக்கு ஒரு நல்ல உபகாரம்.

சினிமா காட்சிகள்.—சினிமா அல்லது பயாஸ்கோப் என்னும் ஜீவப்படக் காட்சிகள் இப்போது எங்கும் சகஜமாய்விட்டன. இக் காட்சிகளில், சன்மார்க்கத்துக்கு அடாத படங்கள் காட்டப்பட்டுவருகின்றன. பொது வாக ஸினிமா படக்காட்சிகளினால் விசேஷ மாக கர்த்தர் பிறந்து வளர்ந்து பாடுபட்ட ஜீவசரித்திர முதலிய ஞானப் படங்களினால் நன்மை விளைகிறதானாலும், தீமை பன் மடங்கு உண்டாகிறது. ஆனதுபற்றி எம்மா திரி படங்கள் பொது ஜனங்களுக்குக் காட் டப்பட்லாம், எவை காட்டவொண்ணாதென நிர்ணயிக்க வங்காளக் கவர்ன்மென்டார் பரி

சோதனைச் சபையொன்றை நியமித்திருக்கிறார்கள். இம்மாதிரியான சட்டம் சென்னைக்கு எப்போது வருமோ ?

ஓர் அநீதக் கொலை.—கோயம்பத்தூரில், புகைப்படம்பிடிக்கும் அலுவல் செய்துகொண்டிருந்த கத்தோலிக்குக் கிறீஸ்துவராகிய மிஸ்டர் சி. எஸ். குருசாமிப் பிள்ளையை அவரது சத்துராதிகள், மோசமாய்க் கொண்டுபோய்க் கொலைசெய்துவிட்டனர். இவரது குமாரத்தியை விவாகம் செய்துகொள்ள ஆசைப்பட்ட ஒரு இந்து பிராமணனால் இந்தப் படுகொலை செய்யப்பட்டதென்றுபோலீசார் சாட்சியங்களுடன் பொள்ளாச்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாவா செய்ததில், அக்கேஸ் விசாரணைசெய்யப்பட்டு கோயம்பத்தூர் செஷன்ஸ் கோர்ட்டில் அடுத்த ஜூலை மீ த்தில் விசாரணைக்கு வருமென்றும் தெரிகிறது. குற்றவாளி ஒரு பெரிய பணக்காரர். அவர் அக்குற்றத்தைப்பற்றி தமக்கொன்றுந் தெரியாதென்றும், குற்றம நடந்ததாகச் சொல்லப்படுகிற நாளில் தான் அந்த இடத்தில் இருந்ததில்லையென்றும் சொல்லுகிறார். உண்மை எப்படியோ ஈசன் அறிவார்.

வெர்டன் சண்டை.—சென்ற ஐரோப்பா மகா யுத்தசம்பந்தமாய் பற்பல விடங்களில் நடந்த மற்ற சண்டைகளெல்லாவற்றையும்விட வெர்டன் என்னுமிடத்தில் நடந்த சண்டை மிகக் குரூரமானதும், மிக்க பயங்கரத்துக்குரியதுமென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்விடத்துச் சண்டையில், 4 லட்சம் யுத்தவீரர்கள் மாண்டு வீழ்ந்துபோக, 12½ மயில் விஸ்தீரணத்துக்கு ஒரே பிணக்காடாயிருந்ததாம். இந்த மகா பயங்கரத்துக்குரிய சண்டையை இனிவருஞ் சந்ததிகளுக்கு நினைப்பூட்டுவண்ணம், டொனுமாண்ட் என்னுங் கோட்டைக்கும், தியமாண்ட் என்னுங் கோட்டைக்கும் மத்திய ஸ்தானத்தில் ஒரு பெரிய ஞாபகஸ்தம்பமும், ஒரு கோவிலும் கட்டுவதற்கு அவ்வூரார் முயற்சிசெய்து வருகிறார்கள். அவ்விடத்திலிருந்து பார்த்தால், அந்தப் பெரிய யுத்தக்கள முழுதும், அதில் ஆங்காங்குள்ள கல்லறைகளுடன் கட்புலனாகுமென்று சொல்லப்படுகிறது. இந்த ஞாபகச் சின்னக்கமிட்டிக்கு, பிரஞ்சு தளக்கர்த்தர் மார்ஷால் போஷ், மாஜி பிரஞ்சு மந்திரியார், பாய்ன்கரே, கர்தினால் துபாய் ஆகிய பெரிய கனவான்கள் போஷகரா யிருக்கிறார்கள்.

ஒரு குருவானவரின் மரணம்.—தம்முடைய தேக சௌக்கியத்தின்பொருட்டு ஐர்லாந்துக்குச் சென்றிருந்த, சென்னை, பெரம்பூர் விசாரணை குருவாகிய சங். பி. ஜே. ஒக்காரல் சுவாமிகள் தேகவியோகமாயினரென்று கேள்வியுற்று விசனப்படலானோம். இந்த நல்ல குருவானவர், சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த, வேப்பேரி, குத்தி, சித்தூர், அடையாறு, இராயப்பேட்டை, பெரம்பூர் விசாரணைகளில் 40 வருஷ காலமாய் பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காக உழைத்தார். வெகு பக்தியுள்ள குரு. இவருடைய கையால் மந்திரிக்கப்பெற்றால் பேய் பசாசுக்கள் ஓடிப்போமென்று அநேக கிறீஸ்துவர்கள் இவரை நாடிச்செல்வார்கள். இவர் பெரிதும் தர்மிஷ்டர். தமது ஐவேசையெல்லாம் ஏழைகளுக்கே உதவிக்கொண்டிருந்து, தாம் தம்மூரிலிருந்து வரும்போது எத்தன்மையாய் வந்தாரோ அத்தன்மையாகவே வெறுங்கையினராய் அங்குத் திரும்பிப்போனார். இவர் ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவதாக !

கத்தோலிக்கு இந்தியரும், இனிவரும் சட்ட சபையும்.—சீர்திருத்தப்பட்ட அரசியல் முறையில் ஏற்படப்போகிற சட்ட நிருபண சபையில், கத்தோலிக்கு இந்தியருக்கும், புரொடெஸ்டாண்டாருக்கும் பொதுவாக ஐந்து ஸ்தானங்கள் அளிக்கப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். அடுத்த எப்பிரல்மீ த்தில் ஆரம்பிக்கப்படப்போகிற இந்த சபை ஸ்தானத்துக்கு யோக்கியதையுள்ளவர்கள் கத்தோலிக்கரில் யார் யார் என்று இப்பொழுதே சில நண்பர்கள் பேசவும், பத்திரிகைகளில் எழுதவும் தொடங்கிவிட்டனர். இவ்விஷயமாய் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதிய நண்பரொருவர், சென்னை, பச்சையப்பன் காலேஜ் சரித்திரப் போதகாசிரியரும், சென்னையில் வெளியாகும், "ஸ்டான்டர்டு" என்னும் ஆங்கில வாராந்திரப் பத்திரிகையின் பத்திராசிரியருமாகிய ஸ்ரீமான் எம். இரத்தினசாமி எம். ஏ., பார்-அட்-லா, சட்ட சபைக்கு யோக்கியமுடையவரென எழுதியிருக்கிறார். இந்தக் கனவானைப்பற்றி நமக்குத் தெரிந்தமட்டும், இவர் இராஜதந்திர நிபுணத்துவத்திலும், கல்வியறிவிலும், அநுபோகத்திலும், முறையான அதிகாரிகளுக்கு அமையுங் குணத்திலும்

மற்ற கத்தோலிக்கு சுகுணங்களிலும் சிறந்தவரென நாம் தடையின்றி சொல்லமாட்டுவோம்.

ஐர்லாந்து. — இந்நாட்டார் தமக்கு சுய ராஜ்ஜியம் கொடுபடவேண்டுமென்று நெடுநாள் போராட்டஞ் செய்துவந்து, இப்போது அதிக்கிரமங்களுக்குத் தலைப்பட்டு விட்டனர். பொது உத்தியோகசாலைகளைக் கொளுத்துவதும், தந்திக்கம்பிகளை அறுப்பதும், போலீஸ்காரர்களைத் தாக்குவதும் அவர்களிருப்பிடங்களுக்குத் தீ மூட்டுவதுமான அதிக்கிரமங்கள் செய்யவே, அவர்கள் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே அவர்கள் உணவு கொள்ளாமல் ஒரே பிடிவாதமாய்ப் பல நாள் பட்டினிகிடக்க, அவர்கள்மேல் இரக்கமுற்ற அதிகாரிகள் அவர்களை விடுதலை செய்தார்கள். விடுதலை யடைந்தபின்னும் அதிக்கிரமஞ்செய்தார் சிலர். தற்போது சற்று அமைதி ஏற்பட்டிருக்கிறது. அன்னார் கேட்கிறபடி முழு சுயராச்சியமல்லாமல் சில நிபந்தனைகளுடன் ஆங்கிலேயருக் கடக்கமான சுய ராச்சிய பரிபாலனஞ் செய்து கொள்ள ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டு, அது இப்போது, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இரண்டாவது முறையும் வாசிக்கப்பட்டு விட்டது. மூன்றாவது முறை வாசிக்கப்பட்டவுடன் அரசர்பெருமானின் அங்கீகாரம் பெற்றபின் அச்சட்டம் அமுலுக்கு வரும். ஆயினும் ஐரிஷ்காரரிற் பெரும்பாலோர் அதை அங்கீகரிக்கவில்லையெனத் தெரியவருகிறது.

கிராமப் பஞ்சாயத்துக்கள். — கிராமப் பஞ்சாயத்தின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுவோரின் யோக்கியதைகள் பின்வருமாறு:— முதலில் ஒரு ஆண்மகனாக இருக்கவேண்டும். இரண்டாவது அவருக்கு வயது 25-க்கு மேல்பட்டிருக்கவேண்டும். மூன்றாவது அவருக்கு கிராமபாஷை எழுதுவதற்கும் படிப்பதற்கும் தெரிந்திருக்கவேண்டும். நான்காவது அவர் (1) அரசாங்கத்தினருக்கு 10-ரூபாய்க்குக் குறையாமல் கிஸ்தி கட்டும் பட்டாதாரராக இருக்கவேண்டும்; அல்லது (2) ரிஜிஸ்தர்செய்து நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு 50-ரூபாய்க்குக் குறையாத வாடகை செலுத்துபவராயிருக்கவேண்டும். அல்லது (3) ஒரு ஜமீன்தாரராயிருக்கவேண்டும். அல்லது (4) 10-ரூபாய்க்குக் குறையாத குயிட்ரெண்ட் செலுத்தும் இனாம்தாரராகவாவது அல்லது 20 ஏக்ராவுக்குக் குறையாத இனாம் நிலச் சுவான்தாரராகவாவது இருக்கவேண்டும். அல்லது (5) வருமானவரி செலுத்துபவராயிருக்கவேண்டும். அல்லது (6) 10-ரூபாய்க்குக் குறையாத வீட்டு வாடகை செலுத்துபவராயிருக்கவேண்டும். அல்லது (7) 10-ரூபாய்க்குக் குறையாத தொழில்வரி செலுத்துபவராயிருக்கவேண்டும். ஐந்தாவது அவர் (1) கடனாளியாயிருக்கக்கூடாது (2) சிறைச்சாலைக்குப் போய்விட்டு வந்தவராக இருக்கக்கூடாது. (3) சுவாதீன அறிவு உடையவராயிருக்கவேண்டும். (4) குருடாகவாவது அல்லது செவிடாகவாவது அல்லது ஊமையாகவாவது இருக்கக்கூடாது. (5) அரசாங்க உத்தியோகஸ்தராக இருக்கக்கூடாது. (கிராம முனிசிப்பாக மாத்திரம் இருக்கலாம்.) (6) குஷ்டரோகியாயிருக்கக்கூடாது.

அபூர்வ அறிவுள்ள பெண்.—அமெரிக்காவில் மிஸ் வினிப்ரெட் ஸாக்வில்லி ஸ்டோனர் என்ற ஒரு பெண்ணிருக்கிறாள். இவள் தன்னுடைய நான்காவது வயதில் விர்ஜில் என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாள். ஒன்பதாவது வயதில் விலாண்ட்ஸ்டான் போர்ட் யூனிவர்சிடியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினாள். இப்பொழுது இந்தப் பெண்ணுக்குப் பதினேழு வயது நடக்கிறது. இவள் இதுவரை சுமார் பதினேழு நூல்கள் எழுதியிருக்கிறாள். சுமார் பதினாயிரம் செய்யுள்கள் இயற்றியிருக்கிறாள். இவளுக்கு இப்பொழுது பதினேழு பாஷைகள் தெரியும். இவள் பல பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதிவருகின்றாள். இவள் தன்னுடைய ஒரு வயதுக்குள்ளேயே நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டாள். இரண்டாவது வயதில் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டாள். நான்காவது வயதில் பல நாடுகளைச் சுற்றிப்பார்த்தாள். சில காலத்திற்குமுன், இவள் லத்தீன் பாஷையிலிருந்து ஒரு புஸ்தகத்தை மொழிபெயர்த்ததுமன்றி தான் பார்த்த இடங்களைப்பற்றிக் குறிப்பும் எழுதிவந்தாளாம்.

பாப்பானவருக்கு ஞாபகச்சின்னம்.— ஐரோப்பிய மகா யுத்தசம்பந்தமாய் நமது பரிசுத்த பாப்பானவராகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர், துருக்கிக்கும், துருக்கியருக்கும் செய்துள்ள பல பரோபகார நன்மை

களுக்கு நன்றியறிதலாக, துருக்கியின் பிரதானநகரமாகிய கான்ஸ்டான்டிநோபிள் என்ற நகரத்தில் பெரியதோர் ஞாபகச் சின்னம் அவர்களால் எழுப்புவதற்காக ஏற்பாடு நடந்துவருகிறது. பாப்பானவரின் உருவச் சிலையொன்றை நிருமானிக்க தீர்மானித்து அதன் இடது பக்கத்தில் ஒரு சிறு மேஜையின்மீது சுவிசேஷப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கவும், வலது கையைத் தூக்கி ஜனங்களை யாசீர்வதிக்கும் பாவனையாகவும் அது செய்யப்பட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய செலவுக்காக துருக்கி சுல்தானும், அவர் அரசிளங்குமாரரும், எஜிப்து சுல்தானும், அர்மீனிய பிரபுக்கள் முதலானோரும் பெருநிதி கொடுத்திருக்கிறார்களெனத் தெரியவருகிறது. துருக்கியர் முதலிய அன்னிய மதத்தினோர் பாப்பரசரை இவ்வாறு மகிமைப்படுத்துவது கத்தோலிக்கருக்குக் கண்யமன்றோ?

ஆச்சரியமான புகைப்படம்.— வட இந்தியாவில் காப்பூர் என்னும் ஊரின் ஜமீன்தாரரான லாலா குண்டன் லால் என்பவர் சென்றமீ 11-ம் தேதி காலகதியடைந்தனர். அவருடைய பிரேதத்தைத் தனியே வைத்து, போட்டோகிராப் எனும் புகைப்படம் பிடித்து அதைக் கழுவி கடுதாசியில் பதித்துப் பார்க்கையில், அந்த ஜமீன்தார் பிரேதத்தின் பக்கத்தில், நாலைந்து பேர்களின் உருவங்கள் சற்று மங்கலாய்ப் பதிந்து காணப்பட்டன. அவற்றை உற்றுப்பார்த்த போது, அவற்றில் இரண்டு உருவங்கள்மட்டும் ஒருவாறு இன்னார் எனக் கண்டுபிடிக்கக் கூடியதாயிருந்தன. மற்ற மூன்றுங் கலங்கலாகக் காணப்பட்டமையால் இன்னாரெனப் புலப்படவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு உருவங்கள் நெடுநாளுக்குமுன் காலஞ்சென்ற ஷை ஜமீன்தாரரின் முதல் பெண்சாதியினுடையவும் பிள்ளையினுடையவும் உருவங்களாம். இதைக்கண்ட பேர்கள் திகைத்துப் பேராச்சரியங்கொண்டனரென்றும், அவ்வூர் முழுவதும் இதே பேச்சாயிருக்கின்றதென்றும் இந்து பத்திரிகைக்கு ஒரு நிருபர் எழுதியிருக்கிறார். பல பத்திரிகைகளில் பிரசுரமாகிவரும் புரளிகளில் இதுவும் ஒன்றுபோலும்.

படத்தினின்று ரத்தம் வடிதல்.— பிரான்சு தேசத்து வடமேற்குப் பாகத்தில், பாயிற்றியர்ஸ் என்னும் ஊருக்கருகே மிரெபீன் என்ற ஒரு சிறு கிராமம் இருக்கிறதாம். இக்கிராமத்தில், வாச்சரே என்னும் குடியானவரின் மேற்பார்வையில் உள்ள ஒரு சிறு கோவிலில், நமதாண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதருக்கு முடிசூட்டிய பாவனையான படமொன்று வைக்கப்பட்டிருக்கிறதாம். இந்தப் படத்தில் சிரசின் முண்முடி காணப்படுமிடத்திலிருந்து அற்புதமாய் சிற்சில சமயங்களில் இரத்தந் துளித்துளியாய் வடிகிறதெனக்கண்டு, புதுமையுள்ள அப்படத்தை அவ்வூராரும், அயல் ஊரார்களும் ஆச்சரியத்துடனும், பக்தியுடனும், விசுவாசத்துடனும் தரிசித்து, நமது ஆண்டவருக்கு வேண்டுதல் புரிந்துவருகிறார்களாம். இப்படி வந்து பிரார்த்தனை செய்துகொள்வோர் அனைவருக்கும் தங்கள் தங்கள் பிரார்த்தனைகள் கேட்கப்படுகின்றனவென்றும், சௌக்கியமடைந்த சப்பாணிகள், முடவர்கள் முதலிய பிணியாளர்களுடைய கக்கதண்ட முதலிய சின்னங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், 1911ஸு செப்டம்பர் மாதம் 8-ம் தேதிதான் முதல்முதல் இவ்வாறு இரத்தம் காணப்பட்டதென்றும், அது முதற்கொண்டுநாளதுவரையில் அவ்விரத்தம் ஓரோர் சமயங்களில் வடிந்துகொண்டேவருகிறதென்றும், அவ்விரத்தத்தைக் கொண்டுபோய் லண்டன் நகரிலுள்ள லிஸ்டர் இன்ஸ்டிடியூட்டில் பரிசோதனை செய்ததில், அது மானிட தேகத்து இரத்தமானாலும் ஒரு விபரீதமானவிதமாயிருக்கிறதென, ஷை இன்ஸ்டிடியூட்டாரால் கருதப்படுகிறதென்றும், இவ்வற்புதத்தைக் கிட்டவிருந்து கண்ணாரக் கண்டுவருகிற கத்தோலிக்கர்கள் அதைக் கர்த்தரின் மகா அற்புதமாக விசுவசிக்கிறார்களென்றும், புரொடஸ்டான்டார்கள் அது விளக்கமுடியாத மாயமா யிருக்கிறதெனச் சொல்லுகிறார்களென்றும், லண்டன்மாநகரத்திற் பிரசுரமாகும் "டேய்லி ஹெரால்டு" என்னும் பத்திரிகையின் பிரதிநிதியொருவர் இதற்கென்று ஷை அதிசயம் நடக்கும் ஊருக்குப்போய் விவரங்களை யறிந்துவந்து சொல்லுகிறார்.

சென்னை, மண்ணடி அர்ச். சவேரியார் கோவில்.— இவ்வாலயத்தில் இவ்வருஷம் மற்றெல்லா வருஷங்களைவிட அர்ச்சிப்சிஷ்டவாரச் சடங்குகள் அதிக சிறப்பாய் நடத்தப்பெற்றன. பங்கு சுவாமிகளாகிய சங். ஹோபேரின் வேண்டுகோளுக்கிணங்கி, கஞ்சித்

தொட்டி அர்ச். ஆரோக்கியநாதர் கோவில் விசாரணை குருவாகிய மோன்சிஞ்ஞோர் இ. எம். ஆஞ்சலோ (Mgr. E. M. Angelo) சுவாமிகளும், கும்பகோண மேற்றிராசனத்தைச்சேர்ந்த மணலூர் விசாரணை குருவாகிய கைமார்ட் (Fr. Gaymard) சுவாமிகளும், ரோஷாநகரத்து விசாரணை குருவாகிய கோபர்டராட் (Fr. Koperdraad.) சுவாமிகளும் வந்திருந்து சடங்குகளை நிறைவேற்றினார்கள். ஷெ மணலூர் சுவாமிகளால் தமிழிலும், ரோஷாநகரத்து சுவாமிகளால் இங்கிலீஷிலும் இனிமையான பிரசங்கங்கள் கர்த்தரின் பாடுகளைக் குறித்துச் செய்யப்பட்டன.

எண்ணூர் அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாள்.—சென்னைக்கு வடக்கில் சுமார் 13 மைல் தூரத்திலிருக்கும் இவ்வாலயத்தில் சென்றமீ 15உ அர்ச். சூசையப்பர் கொடியேற்றப்பெற்று, அன்றுமுதல் 9 நாள் பரியந்தம் மாலையில் அர்ச். சூசையப்பர் தேர் சுற்றுப்பிரகாரத்துடன் நவநாட் செபங்களும், காலையில் திவ்யபூசையும் நடந்தேறி, 24உ சனிக்கிழமை மாலையில் வெஸ்பர்ஸ், பிரசங்க முடிவுபெற திவ்யநற்கருணை ஆசிர்வாதங் கொடுக்கப்பட்டது. பிறகுபார்ப்போர் கண்ணைப் பறிக்குமாறு பற்பல புஷ்பங்களினால் சிறப்பாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்த 5 தேர்கள் சுற்றுப்பிரகாரமாயிற்று. மறுநாள் காலையில் 5½ மணி பூசை முடிவில் மறுபடியும் தேர் சுற்றுப்பிரகாரஞ் செய்யப்பட்டு, 7½ மணிக்கு விசாரணை குரு சங். தேவதாஸ்சுவாமிகளால் பெரிய பாடற்பூசை பாடப்பட்டு, திவ்யநற்கருணை ஆசிர்வாதத்துடன் திருநாள் முடிவுபெற்றது. திருநாளுக்காக திருயாத்திரையாய் வந்திருந்தவர்கள் சுமார் ஆறாயிரம் பேர் ஆவர். சனிக்கிழமை இரா முழுதும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முழுதும் திருயாத்திரைக்காரர் மெழுகுவர்த்தி, பூமுதலிய காணிக்கைகளைச் செலுத்தினவண்ணமாயிருந்தார்கள். வருஷாவருஷமும் இந்தத் திருநாள் சிறப்பாய்க் கொண்டாடப்படமிக்கசிரத்தையுடன்பாடுபட்டுவரும்ஸ்ரீமான் துரைசாமி பிள்ளையையும், அவருடைய குடும்பத்தார் பந்துமித்திரரையும் மகிமையிலிலங்கும் அர்ச். சூசையப்பர் தம் அடைக்கலத்தில் வைத்து பல்லாண்டு பாதுகாத்து வருவாராக.

சேசுவின் திரு இருதய கொலு ஸ்தாபகம்.—சென்ற ஏப்ரல்மீ 18உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு சென்னை, இராயப்பேட்டை, நெ. $^{2}/_{26}$ வீட்டின் நிவாசியாகிய ஸ்ரீமான் எம். ஜெ. மலையப்பன் அவர்கள் தம்முடைய ஷெ கிரகத்துக்கு தமது பந்துமித்திரரனைவரையும் அழைத்திருக்க, சேசுவின் திரு இருதயத்தைக் கிறீஸ்துவர்கள் தங்கள் இல்லங்களில் கொலு ஸ்தாபகஞ் செய்வதினால் வரப்பெறும் அரியபெரும் நன்மைகளைப்பற்றி சிறியதோர் பிரசங்கம் மயிலாப்பூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். எப். கர்வாலோ சுவாமிகளால் செய்யப்பட்டு, ஷெ வீட்டின் பிரதம ஸ்தானத்தில் அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்த கொலுவில் முறைப்படி, அதாவது சொல்லவேண்டிய ஜெபங்களைச் சொல்லியும், செய்யவேண்டிய சாங்கியங்களைச்செய்தும் சேசுவின் திரு இருதய ஸ்தாபகம் நிகழ்ந்தது. பிறகு அங்கு கூடியிருந்தவர்கள் சேசுவின் திரு இருதயத்துக்குத் தோத்திரமாக சில கீர்த்தனைகளைப் பாட, சகலமும் அனுகூலமாய் முடிவாயிற்று. ஸ்ரீமான் மலையப்பன் அவர்களுடைய முன்மாதிரிகையை மற்றக் கிறீஸ்துவர்களும் பின்பற்றி, தங்கள் இல்லங்களில் சேசுவின் திரு இருதய கொலுவை ஸ்தாபித்து அத்திரு இருதயத்தின் ஆசீரை நிரம்பப் பெற்றுக் கொள்வார்களாக.

விளம்பரம்.—லூர்துநாயகியின் அமலோற்பவத்தினுடையவும், முடிசூட்டலினுடையவும் பொருத்தனைக் கோவிலாகிய ஆரம்பாக்கத்துக் கோவிலில் தேவமாதாவின் வணக்கமாதத்துக் கடைசிநாள் வழக்கப்படி கொண்டாடப்படும். 1920-ம் வருஷம் மே மாதக் கடைசி நாளாகிய 31-ந்தேதி திங்கட்கிழமை மாலையில் ஜெபமும், சின்ன தேர் சுற்றுப்பிரகாரமும், பிரசங்கமும் திவ்யநற்கருணை ஆசிர்வாதமும் நிகழும். அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை காலையில் பாடல் பூசையும், பிரசங்கமும், திவ்யநற்கருணை ஆசிர்வாதமும், நடைபெறும். இந்தப் பொருத்தனைக் கோவிலில் நமது தேவதாயாரை வணங்கி கிருபைபெற ஆசையுள்ள திருயாத்திரைக் காரரெல்லோரையும் இத்திருநாளுக்கு வரும்படி அன்புடன் அழைக்கிறோம்

S. M. F. இஞ்ஞாசியார்,

விசாரணை குருவானவர்.

லூர்துமரி கோமஸ் அம்மாள்

நன்மரண ஞாபக அறிக்கை.

பூர்வீகத்தில் "லங்காபுரி" என வழங்கிய இலங்கைத்தீவில் "டிக்முக்கலான" (Dikumukalana) எனும் தோட்டத்தின் சொந்தக்காரரும், திருமந்திர நகரமெனும் தூத்துக்குடியின்கண் ஓர் திலகம்போல் ஜொலித்துவழங்கும் ஸ்ரீமான் எம். பி. கோமஸ் அவர்களின் சகோதாருமாகிய ஸ்ரீமான் எம். ஜீ. கோமஸ் அவர்களின் சிரேஷ்ட புதல்வி ஸ்ரீமதி லூர்துமரி கோமஸ் அம்மாள் மொராட்டுவவில் பிறந்து, திருவனந்தபுரத்தில், தமிழ், ஆங்கிலம், ஆகிய இரு பாஷைகளையும் கற்றறிந்து, இலங்கையில் பிரபல வர்த்தகர்களாகிய மெஸர்ஸ், எம். பி. கோமஸ் அன் கம்பெனியிலிருக்கும் ஸ்ரீமான் நசரேத் கோமஸ் அவர்களை 1919௵ மார்ச்சுமீ 3-ந் தேதி பாதகுல குருக்கள் மூவரால் தூத்துக்குடியில் திருமணஞ்செய்யப் பாக்கியம்பெற்றுள்.

அச்சம், மடம், ஞானம், பயிற்பு ஆகிய நற்குணங்களையே தன் ஆபரணங்களாகப்பூண்ட ஷை மாதுசிரோன்மணி தான் கலியாணஞ்செய்த ஒரு மாதகாலத்தில் கொடிய நோயாகிய விஷஜுரத்தின் வசப்பட்டு, எவ்வித அவுஷதம் பிரயோகம்பண்ணியும், பிரயோஜனப்படாமல் கடைசி தேவத்திரவிய அநுமானங்களை நல்லறிவுடன் பெற்று, தான் திருமணம் செய்த 71-ம் நாளாகிய ஷை ௵ மேமீ 12-ந் தேதி திங்கட்கிழமை காலை 6 மணியளவில் தன்னைத் திருமணமுடித்த நாயகன் ஒரு புறமும், தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் ஒரு புறமும், தன் பிரிய மாமியார், மதினிமார் மற்றோர் புறமுமாக மனங்கலங்கி அழுதுநிற்க, 'கூட்டிலடைபட்ட கிளி வாசலைத் திறந்தமாத்திரத்தில் கூட்டைவிட்டுப் பறந்து தன் புள்ளினங்களோடு கூடிக்கொள்வது'போல், தனது இருபதாம் பிராயத்தில், இவ்வுரிமையற்ற உலக வாழ்வைவிட்டு, சதா உரிமைவாய்ந்த மேலோக வாழ்வையடைந்தனள். சர்வ சாம்பிராஜ்ஜிய வல்லபராகிய நமது பெருமான், இவ்வாத்துமாவுக்கு முடிவற்ற நித்திய ஜீவனை யருள்வாராக. இதைப் பார்வையிடும் நண்பர்கள் இவ்வாற்றும இரட்சண்ணியத்திற்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

ஓர் பரதகுல அநுதாபி.

வேம்பார்.

"தயையாயிருங்கள் என் நேசர்களே நீங்களாவது என்பேரில் தயையாயிருங்கள்"
(யோபு. 19-ம் அதிகாரம், 21-ம் வசனம்.)

சீருஞ் சிறப்பும் செழித்தோங்கி மேன்மை பெற்றிலங்கும் நிம்பை நகரின்கண் சந்திரகுலத்தில் பெரிய அடப்பனுரென புகழ்பெற்ற நாமமுடைத்து, சகலராலும் சற்குண புண்ணியனென நன்கு மதிக்கப்பெற்று, சர்வலோகநாதனைச் சதா மனதிருத்தி காலஞ்சென்ற ஸ்ரீமான் சந்தியாகு மாதவடியான் பெர்னுந்து அவர்களின் கனிஷ்ட புத்திரர் ஸ்ரீமான் நிக்கிலாஸ் பெர்னுந்து அவர்களின் அருமை மிகு புத்திரியும் இலங்கை யாழ்ப்பாணத்தின்கண் வர்த்தகம்புரியும் எனது சிறிய தந்தை சூ. லாசர் பெர்னுந்து அவர்களின் பிரிய மனைவியும் எனது அன்புள்ள சிற்றன்னையுமாகிய ஸ்ரீமதி மரிய கத்தரினம்மாள் என்ற இரத்தினம்மாள் பெர்னுந்து பிரசவ வேதனையால் பீடிக்கப்பட்டு, எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல், கடைசித் தேவத்திரவிய அனுமானங்கள்யாவும் குறையறப் பெற்று தம்மின் பிரிய பத்தாவையும் கண்ணிமைகொட்டாது பாதுகாத்துவந்த தமது அன்பின் களஞ்சியமாகிற 11 வயதுடைய அருமைப் புத்திரியையும் மற்றும் பந்துமித்திரர்கள் யாவரையும் மனங்கசிந்து கலங்கவிட்டு 1920ஞ எப்பிரல்மீ 6-ம் உ இரவு சுமார் 10 மணிக்கு சேசு மரியே சூசை எனது ஆத்துமத்தை உமது கரத்தில் ஒப்படைக்கிறேனென்ற இனிய வசனத்துடன் தமது 32-ம் வயதில் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகுக்கேகினர். மறுதினம் காலை 10 மணிக்கு அவர்களின் சடலத்தை எண்ணிறந்த ஜனங்கள் புடைசூழ சிமித்தேரிக்குக் கொண்டுபோய் நல்லடக்கஞ்செய்தார்கள். இதைக் கண்ணுறும் நேசசகோதர சகோதரிகளே இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

அன்புள்ள சிற்றன்னையை இழந்து பரதவிக்கும் புதல்வன்,

யாழப்பாணம், 7—4—20. } S. L. D. Fernando.

இரங்கூன்.

சென்னை, மகாநாடு ஸ்ரீமான் தம்பியப்பனவர்கள் புதல்வரும், சென்னை அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க சூசை கால்கன் ஆண்டவரின் கிரக உக்ராணருமாயிருந்த மாஜி A. சின்னசாமிப் பிள்ளை அவர்கள் மருகரும், பிராட்வேயில் புஸ்தக ஷாப்பு நீப்பருமாயிருந்தவரும் எனது அருமை மாமனுருமாகிய மரியதாஸ் பிள்ளை அவர்கள் 1920ஞ எப்பிரல்மீ 3-ம் தேதியாகிய பரிசுத்த வாரம் சனிக்கிழமை காலை $4\frac{1}{2}$ மணிக்கு தமது கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றுத் தமது 54-வது வயதில் அவரது அருமைக் களத்திரத்தையும், தனது ஏகப் புதல்வியோடு மற்றும் இனஜன பந்துக்களையும் இப்பரதேசத்தின்கண் கலங்கவிட்டு, சேசுபிரானின் திருவடி நிழல் அடைந்தனர். இவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி., திரி., வேண்டுமாறு கேட்டுக்கொள்ளும் ஷையாரின் மருகர்,

12—4—1920. D. C. சாலமோன். உபதேசி.

M. M. தோமாஸ் பிள்ளை
அதிர்ஷ்ட லாட்டரி சீட்டுகள்.
ஓசூர் ரிமவுண்ட் டிபோ P. O.
தென் இந்தியா.

முந்துங்கள்! முந்துங்கள்!!

ST. ANN'S ORPHANAGE RAFFLE.

டிக்கட் ஒன்றுக்கு 4-அணுதான்.

பிரைஸோ ரூபாய் 3 000 த்திலிருந்து 250 வரையிலுமுண்டு.

"பிரைஸ் விழுந்தவர்களுக்கு உடனே தெரிவிக்கப்படும்."

லாட்டரி நடைபெறும் தேதி 29—6—20.

10 டிக்கட்டுக்கு ஒரு டிக்கட் இனும். தேவையுள்ளவர்கள் பணம் அனுப்பியாவது, வி. பி. மூலமாயாவது தருவித்துக்கொள்ளலாம். புஸ்தகம் விற்கக்கூடியவர்கள் உடனே எழுதுங்கள். 2 புஸ்தகம் விற்ருல் ஒரு ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும். இதில் சேர்வதினுல் கஷ்டகாலத்திற்கு லாபமும், தர்மத்தின் பங்கும் அடையலாம். காலதாமதம் செய்யவேண்டாம்.

Address :—

M. M. THOMAS PILLAI.
Cath. Catechist,
Hosur, Remount Depot P. O.,
S. India.